உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௫] வெகுதானியஹூ ஆடி-மீ [பகுதி-௯.

Vol. 35. July—August 1938. No. 9.

ஹாஸ மகாகவி இயற்றிய

அபிஷேக நாடகம்.

உ௭௬-ஆம் பக்கத் தொடர்ச்சி.

இரண்டாவது அங்கம்.

கருபன்:—(அரங்கிற் புகுந்து) கார்யத்தை முடித்துவிட்டதால் வானரசேனாதிபதிகள் உணவுதேடுவதில் முயற்சியுள்ளவர்களாயிருக்கிறார்கள்; ஆதலால் நானும் தின்பண்டங்களைத் தேடுகிறேன். (அவ்வாறு செய்தல்)

பிலமுகன்:—(அரங்கிற் புகுந்து) மகாராஜரான சுக்ரீவரால் அனுப்பப்பட்டிருக்கிறேன்; "பூசிக்கத்தக்கவரான இராமபிரான் செய்த உபகாரத்துக்குப் பிரதியுபகாரம்செய்வதற்காக ஸீதையைத் தேடுவதில் எல்லாத்திசைகளிலும் அனுப்பப்பட்ட வானரர்கள் திரும்பிவந்துவிட்டார்கள்; அவர்களுள் தென்திசைக்குச் சென்றவனான குமாரன் அங்கதனுடைய செய்தியைத் தெரிந்து வருவாயாக" என்று அவர் உத்தரவளித்திருக்கிறார். குமாரன் எங்கே சென்றிருப்பான்? இதோ பூசிக்கத்தக்கவரான கருபர் இருக்கிறார். அவரைக் கேட்கிறேன். (கருபனை நோக்கி) ஆர்யர் சௌக்கியமா?

கருபன்:—ஓ! பிலமுகனா? நீ எங்கிருந்து வருகிறாய்?

*

பிலமுகன்:—மகாராஜரின் ஆணையால் குமாரன் அங்கதனைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறேன்.

கதுபன்:—பூஜ்யரான இராமபிரானும் மகாராஜரும் சௌக்கியமா?

பிலமுகன்:—ஆம்.

கதுபன்:—மகாராஜரின் கருத்து என்னை?

பிலமுகன்:—[முன் உரைத்ததையே (திரும்பவும்) சொல்லுதல்.]

கதுபன்:—காரியத்தின் பயன் என்னவென்று உனக்குத் தெரியாதே?

பிலமுகன்:—என்ன? என்ன?

கதுபன்:—கேட்பாயாக.

ஶ்ருத்வா வ்ருத்தாந்தம் ராமபத்ந்யா: பதகேந்த்ரா
த்ஸாநூத்யாமேந்த்ரம் ஸஙிலேந்த்ரம் மஹேந்த்ரம் ।
லங்காமேத்யேதும் வாயுபுத்ரேண வீர்யம்
வீக்ஷ்யோத்ஸாஹாம்பவித: ஸாகரோ லங்க்ய ॥

இராமபிரானுடைய மனைவியின்செய்தியைப் பறவையரசன் சம்பாதியால் தெரிந்துகொண்டு, வாயுவின்புதல்வனான அனுமானால், யானைகள் நிறைந்ததான மகேந்திரமலையில் ஏறி, அதிக வீர்யத்தைக்கொண்டு இலங்கைசெல்வதற்காகச் சமுத்திரம் தாண்டப்பட்டது. ஆகையால் வருவாயாக. குமரன் பாதங்களையடைவோம். (வெளியேறுதல்)

விஷ்கம்பகம் முற்றும்.

சீதை:—[அரக்கிகளாற் சூழப்பட்டு அரங்கிற் புகுந்து] ஹா! சீ! பாக்கியமற்ற நான் மிக்க தைர்யமுடையவளாயிருக்கிறேன்; ஆர்யபுத்திரரைவிட்டுப்பிரிந்தும், அரக்கராசனுடைய மாளிகைக்குக் கொணரப்பட்டும், கேட்கத்தகாதனவும் மனத்துக்குத்தோன்றியபடி உரைக்கப்படுகின்றனவுமான சொற்களைக் கேட்டும் நான் இன்னும் உயிர்தரித்திருக்கிறேனே? ஆர்யபுத்திரருடைய அம்பின்

வலியில் நம்பிக்கைவைத்து எவ்வாருவது உயிரைக் காப்பாற்று கிறேன். மூட்டப்பட்டிருக்கிற கொல்லன் உலைத்தியில் தண்ணீர் வார்த்ததுபோல் இன்று (எனக்குச்) சற்று மனத்தெளிவு பிறக் கிறதே; என்னைவிட்டுப் பிரிந்து ஆர்யபுத்திரர் தெளிந்தமனத்துட னிருப்பாரா?

(அனுமான் மோதிரத்தைக் கையிற்கொண்டு அரங்கிற் புகுதல்.)

ஹநுமான்:— (இலங்கையிற்புகுந்து) ஓ! இராவணன்மாளிகைச் சிறப்பே!

𑌕𑌨𑌕𑌰𑌚𑌿𑌤𑌚𑌿𑌤𑍍𑌰𑌤𑍋𑌰𑌣𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌾
𑌮𑌣𑌿𑌵𑌰𑌵𑌿𑌦𑍍𑌰𑍁𑌮𑌶𑍋𑌭𑌿𑌤𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌾 ।
𑌵𑌿𑌵𑌿𑌧𑌵𑌿𑌕𑍃𑌤𑌸𑌂𑌹𑌿𑌤𑍈𑌰𑍍𑌵𑌿𑌮𑌾𑌨𑍈𑌰𑍍
𑌵𑌿𑌜𑌯𑌤𑌿 𑌸𑍁𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌵 𑌸𑌾𑌤𑌿 𑌲𑌂𑌕𑌾 ॥

பொன்னால் ஆக்கப்பட்டனவாயும் விசித்திரமாயுமுள்ள தோ ரணங்கள் நிறைந்ததும், சிறந்த இரத்தினங்களாலும் பவளங்களா லும் இழைக்கப்பட்ட தளவரிசைகள் கொண்டதும், ஒளிர்கிற அற்புதமான விமானங்களால் நிரப்பப்பட்டதும் ஆகி வானுலகில் தேவேந்திரனகரம்போல் இலங்கைநகர் விளங்குகிறதே! என்ன ஆச்சரியம்.

𑌉𑌤𑍍𑌤𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌦𑌶𑌗𑍍𑌰𑍀𑌵𑍋 𑌰𑌾𑌜𑍍𑌯𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌮𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌮𑍍 ।
𑌵𑌿𑌮𑌾𑌰𑍍𑌗𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌤𑌾𑌂 𑌚𑍍𑌯𑌾𑌵𑌯𑌿𑌤𑍁𑌮𑍁𑌦𑍍𑌯𑌤𑌃 ॥

மிகவும் சிறந்த ராஜ்யலக்ஷ்மியையடைந்தும் தசக்ரீவன் கெட்டவழியில் நடப்பவனாதலால், நாசஞ்செய்யத் துணிகிறானே!

(எங்கும் சென்று)

இலங்கை முழுவதும் சுற்றித்திரிந்தேன்.

𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌗𑌾𑌰𑌵𑌿𑌨𑌿𑌷𑍍𑌕𑍁𑌟𑍇𑌷𑍁 𑌬𑌹𑍁𑌶𑌃 𑌶𑌾𑌲𑌾𑌵𑌿𑌮𑌾𑌨𑌾𑌦𑌿𑌷𑍁
𑌸𑍍𑌨𑌾𑌨𑌾𑌗𑌾𑌰𑌨𑌿𑌶𑌾𑌚𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌭𑌵𑌨𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌹𑌰𑍍𑌮𑍍𑌯𑍇𑌷𑍁 𑌚 ।
𑌪𑌾𑌨𑌾𑌗𑌾𑌰𑌨𑌿𑌶𑌾𑌨𑍍𑌤𑌦𑍇𑌶𑌵𑌿𑌵𑌰𑍇𑌷𑍍𑌵𑌾𑌕𑍍𑌰𑍀𑌡𑌵𑌾𑌟𑍀𑌷𑍍𑌵𑌹𑌮𑍍
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌹𑌾! 𑌵𑌿𑌚𑌿𑌤𑌂 𑌨 𑌚𑍈𑌵 𑌨𑍃𑌪𑌤𑍇𑌃 𑌪𑌤𑍍𑌨𑍀 𑌯𑌥𑌾 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 ॥

அந்தப்புரம், கொடுங்கைகள், அறைகள், விமானங்கள், ஸ்நாநக்கட்டங்கள், மாளிகைகள், மதுபானஞ்செய்யுமிடங்கள், வீடுகளின் இடைவெளிகள்: எங்கும் நான் சுற்றிப்பார்த்தேன்; நமது அரசரான ஸ்ரீராமபிரானுடையமனைவியைக் காணவில்லையே!

ஓ! என்னுடைய சிரமம் வீணே; இருக்கட்டும், இந்த மாளிகையின்மீது ஏறிப்பார்க்கிறேன். (அவ்வாறுசெய்து) ஓ! இதோ பூங்காவனம்; இதில் நுழைந்து தேடுவேன். (நுழைந்துபார்த்து)

ஓ! உத்தியானத்தின் வனப்பே! இது,

𑌕𑌨𑌕𑌰𑌚𑌿𑌤𑌵𑌿𑌦𑍍𑌰𑍁𑌮𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌨𑍀𑌲𑍈𑌰𑍍
𑌵𑌿𑌪𑍁𑌲𑌤𑌰𑍁𑌷𑌣𑍍𑌡𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌦𑍇𑌶𑌾 ।
𑌰𑍁𑌚𑌿𑌰𑌤𑌰 𑌨𑌗𑌾 𑌵𑌿𑌭𑌾𑌤𑌿 𑌚𑌿𑌤𑍍𑌰𑌾
𑌨𑌭𑌸𑌿 𑌸𑍁𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌿𑌹𑌾𑌰𑌭𑍂𑌮𑌿𑌕𑌲𑍍𑌪𑌾 ॥

பொன்னிற்குயின்றபவளம் நீலமணி இவைகளால் விளங்குகிற பெரிய விருக்ஷவரிசைகள் நிரம்பியதும், மிகவும் அழகான மலையுடன்கூடியதும், விசித்திரமான இடங்களுள்ளதுமாகத்தேவேந்திரனுடைய விளையாட்டுப்பூமிபோல் விளங்குகிறதே!

மேலும்,

𑌵𑌿𑌦𑍍𑌰𑍁𑌤𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌤𑌹𑍇𑌮𑌯𑍋 𑌧𑌾𑌰𑌾𑌦𑍍𑌰𑌿𑌰𑌾𑌜𑌶𑍈𑌲𑌾𑌶𑍍𑌚 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾 𑌮𑌯𑌾
𑌨𑌾𑌨𑌾𑌵𑌾𑌰𑌿𑌵𑌿𑌹𑌰𑌣𑍈𑌰𑍍𑌵𑌿𑌹𑌸𑌿𑌤𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾 𑌮𑌯𑌾 𑌦𑍀𑌰𑍍𑌘𑌿𑌕𑌾𑌃 ।
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌫𑌲𑌾𑌢𑍍𑌯𑌪𑌾𑌦𑌪𑌯𑍁𑌤𑌾 𑌦𑍇𑌶𑌾𑌶𑍍𑌚 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾 𑌮𑌯𑌾
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑌿𑌦𑌂 𑌹𑌿 𑌰𑌾𑌵𑌣𑌗𑍃𑌹𑍇 𑌸𑍀𑌤𑌾 𑌨 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾 𑌮𑌯𑌾 ॥

நன்றாய் உருக்கப்பட்டபொன்போல் மனத்தைக் கவர்கிறமலைகளும் என்னால் பார்க்கப்பட்டன; விதம்விதமான நீர்ப்பறவைகள் விளையாடுகிற வாவிகளும் என்னால் பார்க்கப்பட்டன; எப்பொழுதும் புஷ்பங்கள் பழங்கள் நிறைந்த மரங்கள் அடர்ந்த இடங்களும் என்னால் பார்க்கப்பட்டன; இராவணன்வீட்டில் எல்லா இடங்களும் என்னால் பார்க்கப்பட்டன; ஆனால் சீதையை நான் காணவில்லையே.

இந்த இடத்தில் ஒளி ஒன்று தோன்றுகிறதே. அங்கே பார்க்கிறேன். (அவ்வாறு செய்து) இவர் யார்? கறுப்புமுகில்களுக்கூடே மின்னற்கொடிபோல், கோரரூபங்கொண்ட அரக்கியரால் சூழப்பட்டுச் சின்னஞ்சிறிய இடையுடையதாய் ஓர் உருவம் விளங்குகிறதே! இவர்,

அஸிதைகஜடாகலாபாம் யாரயந்த்யேகவேணீம்
கரபரிமிதமத்யா காந்தஸம்ஸக்தசித்தா ।
அநஶநக்ருஶதேஹா பாஷ்பஸம்ஸிக்தவக்த்ரா
ஸரஸிஜவநமத்யே வாதபே விப்ரவித்தா ॥

கருநாகம்போன்ற ஒரே மயிர்ப்பின்னலுடையவராய், கைப்பிடியிலடங்குவதான இடையுடனும், கணவரிடம்வைத்த மனத்துடனும், உணவின்மையால் இளைத்த தேகத்துடனும், கண்ணீரால் நனைக்கப்பட்ட முகத்துடனும், கடும்வெய்யிலால் வெதும்பிய தாமரையோடையைப்போல் விளங்குகிறாரே!

அடடா! இங்கே தீபங்களின்வெளிச்சம்! (பார்த்து) அடே! இராவணன்!

மணிவிரசிதமௌலிஶ்சாருதாம்ராயதாக்ஷோ
மதஸலலிதகாமீ மத்தமாதங்கலீல: ।
யுவதிஜநநிகாயே ஹ்யத்ர ஸௌ ராக்ஷஸேஶோ
ஹரிரிவ ஹரிணீநாம் மத்யதோ வேஷ்டிதோ ந: ॥

மணிகளால் இழைக்கப்பட்ட கிரீடத்துடன், சிவந்து நீண்ட அழகிய கண்களுடையவனாய் மதங்கொண்ட யானைபோல் நடப்பவனாய், மான்பேடுகளின் நடுவில் திரிகிற சிங்கம்போல் யுவதிகளின் கூட்டத்தில் இந்த அரக்கராசன் விளங்குகிறானே!

இப்பொழுது என்ன செய்வேன்? இருக்கட்டும், தெரிந்தது; இந்த அசோகவிருக்ஷத்தில் ஏறிக்கொண்டு மரப்புழையில்மறைந்திருந்து விருத்தாந்தத்தை நன்கு அறிவேன். (அவ்வாறே செய்தல்)

இராவணன்:—(பரிவாரத்துடன் அரங்கிற் புகுந்து)

திவ்யாஸ்த்ரை: ஸுரதைத்யதானவசமூவித்ராவணம் ராவணம்
யுத்தே க்ருத்தஸுரேபதந்தகுலிசவ்யாலீடவக்ஷஸ்தலம்।
ஸீதா ஸா ஸவிவேகினீ ந ரமதே ஸக்தா ச ஸுப்ரேக்ஷணா
க்ஷுத்ரே க்ஷத்ரியதாபஸேऽனுராகதோ ஹா தைவஸ்ய வக்ரக்ரியா॥

திவ்யமான அஸ்திரங்களால் தேவர், அசுரர், தானவர் இவர்களின் சேனைகளை வெருட்டுபவனையும், போரில் சினங்கொண்ட ஐராவதத்தின் வைரம்போன்ற தந்தங்களால் தாக்கப்பட்ட மார்புடையவனையுமிருக்கிற இராவணனைப் புத்திகெட்டவளும் அழகிய கண்களுள்ளவளுமான சீதை, அல்பனான க்ஷத்திரியத்தவசிமீது வைத்திருக்கிற அன்பினால் பொருட்படுத்தவில்லையே! நிச்சயமாக இது தெய்வத்தின் தடையே!

மேலேநோக்கி,

ரஜதாரசிததர்பணப்ரகாச:
கரநிகரோஹ்ருதயம் ஸமாவிதீர்ய।
உதயதி மம தே விஜ்ரும்பஸாரண:
குமுதவனப்ரியபாந்தவ: சசாங்க:॥

வெள்ளியாற் செய்யப்பட்ட கண்ணாடிபோல் ஒளிர்கிறவனையும் ஆம்பல் ஓடைக்கு நண்பனையும் இருக்கிற இந்தச் சந்திரன், தன்னுடைய கிரணங்களால் என் ஹிருதயத்தைப் பிளந்துகொண்டு இறுமாப்புடன் வானத்தில் தோன்றுகிறானே!

(சற்றுநடந்து) இந்தச் சீதை மரத்தடியில் இருந்துகொண்டு, யோசனையில் ஆழ்ந்த மனத்துடனும் உணவின்மையால் வற்றிப்போன வதனத்துடனும் தன் தேகத்துக்குள்ளேயே நுழையவிரும்பியவள்போல்கொங்கைகளையும் வயிற்றையும் மறைத்துக்கொண்டு, மேகங்களால் மறைக்கப்பட்ட சந்திரகலையைப்போல், அரக்கிகளாற் சூழப்பட்டு வீற்றிருக்கிறாளே!

இவள்,

ஸ்வாபாஸ்ய ஹா மமாஸாம் ஏவ ப்ரியம் ச ஸஹதீக்ஷிதாம்।
ஸா ந்ரூபே ந்யஸ்தஹ்ருதயா நைவ வச்யத்வஸாமதா॥

போகங்களையும், என்னையும், இந்தப் பெருத்த செல்வத்தையும், தள்ளிவிட்டு மனிதனிடம் மனத்தைவைத்தவளாய் (எனக்கு) வசப்படவில்லையே! (நெருங்கிவந்து)

ஸீதே! த்யஜ த்வம் வ்ரதமேதது³க்³ரம்
ஸஜ்ஜஸ்வ மாம் ஸாத்⁴வி ஸர்வகா³த்ரை꞉।
க்ஷீணாயுஷம் தம் மாநுஷம் ஹித்வா!
முதா யௌவநம் காமயோகா³நிவ்ருத்தம்॥

ஹே! அழகுபொருந்திய சீதையே! இந்தக் கடினமான விரதத்தை விட்டுவிடுவாயாக; ஆயுள்குன்றியவனும் காமவேட்கையற்றவனுமான அந்த மனிதனைத் தள்ளிவிட்டு முழுமேனியுடனும் இன்றே என்னை அடைவாயாக.

ஸீதை:—இந்த இராவணன் கேடுகெட்டவனே! சொன்னால் சொன்னபடி நிகழக்கூடியதான என்னுடைய வாக்கின் மகிமையை இவன் தெரிந்துகொள்ளவில்லையே.

ஹநுமான்:–(கோபத்துடன்) ஓ! இராவணனுடைய இறுமாப்பே!

தௌ ச பா³ஹூ ந விஜ்ஞாய தச்சாபி ஸுமஹத்³த⁴நு꞉।
ஸாயகம் சாபி ராமஸ்ய க³தாயுரிதி பா⁴ஷதே॥

ஸ்ரீராமபிரானுடைய அந்தக் கைகளையும், அந்தப் பெரிதான வில்லையும், அம்பையும் தெரிந்துகொள்ளாமல், "ஆயுள் குன்றியவன்" என்று பிதற்றுகிறானே!

என்னால் கோபத்தை அடக்கமுடியவில்லையே! இருக்கட்டும், பூஜ்யரான இராமபிரானுடைய காரியத்தை நானே செய்கிறேன்; அல்லது,

யத்³யஹம் ராவணம் ஹந்மி கார்யஸித்³தி⁴ர்ப⁴விஷ்யதி।
யதி³ மாம் ப்ரஹரேத்³ரக்ஷோ ஸகலம் கார்யம் விபத்³யதே॥

நான் இராவணனைக் கொன்றால் கோரிக்கை நிறைவேறும்; அரக்கன் என்னை வதைப்பானானால், பெருங்காரியம் கெட்டுவிடுமே!

இராவணன்:—வா தநு! தநூதாி! காஞநெதெ!

கூவலயதாஉதிஹாம் விமூஷ்ய வெணீம் ।

ஸஹாவிய ஊணிரதூஹூஷிதாம்ஶம்

உஶஶிரஷம் உநவஸா ஹஜஹ்வ தெவி! ॥

ஹே! அழகியமேனியுள்ளவளே! மெல்லிய அங்கம் உடையவளே! மனத்தைக் கவர்வனவான கண்கள் படைத்தவளே! நீலோற்பலமாலைபோன்ற பின்னலை அவிழ்த்துவிட்டுப் பலவிதமான நவமணிகளாலும், இரத்தினங்களாலும் அலங்கரிக்கப்பெற்ற பத்துத்தலையுடையவனுன என்னை மனங்கொண்டு அடைவாயாக.

சீதை:—ஐயோ! தர்மம் தடுமாறுகிறதே! இந்தப் பாவி அரக்கன் இன்னும் உயிருடனிருக்கிறுனே!

இராவணன்:—தேவி!

சீதை:—நீ சபிக்கப்படுகிறுய்.

இராவணன்:—ஹ! ஹ! ஹ! ஆச்சரியம்! பதிவிரதையின் தேஜஸே!

தெவாஃ ஸெநூாஉயொ ஹநா உாநவாஸ்வ யோ ரணெ ।

ஸொஹம் ஶொஹம் மதொஸ்யுஉ வீதாயாஷ்ரிஹிரக்ஷரெஃ ॥

இந்திரன் முதலிய தேவர்களும் தானவர்களும் என்னுல் போரில் முறிய அடிக்கப்பட்டார்கள்; அந்த நான் சீதையினுடைய "சா–ப–ம்" என்ற மூன்று எழுத்துக்களால் மயக்கத்தை அடைந்துவிட்டேனே!

(திரைக்குள்)

தலைவர் வென்றிபெறுக; இலங்கையரசர் வாழ்க; நாதர் நன்ருயிருக்கவேண்டும்; மகாராஜர் மேன்மைதங்கியவராயிருக்கவேண்டும்; பத்துநாழிகைகள் கழிந்துவிட்டன; நீராடும்வேளை வந்துவிட்டது. இங்கே இங்கே மஹாராஜர் எழுந்தருளவேண்டும். (பரிவாரங்களுடன் இராவணன் வெளியேறுதல்.)

ஹநுமான்:—அப்பாடா! இராவணன் சென்றுவிட்டான்; அரக்கியர் உறங்கிவிட்டனர்; தேவியிடம் அணுகிச்செல்ல இது தான் சமயம்; (மரப்புதரிலிருந்து இறங்கி), 'சுமங்கலியாகிற நீங்கள் வாழவேண்டும்.

ப்ரேஷிதோஹம் நரேந்த்ரேண ராமேண விதிதாத்மநா ।

த்வத்த்வத்ஸ்நேஹஸங்காவாஶு விஷ்வக்ஸ்ருதவேதஸா ॥

நரேந்திரரும் எல்லாமறிந்தவரும் உம்மிடம் வைத்த அன்பின் வேட்கையால் துவண்டுபோன மனமுள்ளவருமான ஸ்ரீராமபிரானால் நான் (இவ்விடம்) அனுப்பப்பெற்றேன்.'

சீதை:—(தனக்குள்) இவன் யார்? பாவியான அரக்கனே ஆர்ய புத்ரரைச் சார்ந்தவன் எனச் சொல்லிக்கொண்டு வானர உருவத்துடன் என்னை வஞ்சிக்கக் கருதுகிறானோ? இருக்கட்டும், வாளாவிருக்கிறேன்.

ஹநுமான்:—நீங்கள் நம்பவில்லையா? பிறன் என்று சந்தேகிக்க வேண்டா; நீங்கள் தயவுசெய்து கேட்கவேண்டும்.

இக்ஷ்வாகூணாம் குலீநேந ஸம்யாய ஹரிணா த்வஹம் ।
ப்ரேஷிதஸ்த்வத்விசித்யர்த்தம் ஹநூமாந் நாம வாநர: ॥

இக்ஷ்வாகுகுலத்துக்கு விளக்கான ஸ்ரீராமபிரானால் வானர ராஜனுடன் நட்புச்செய்துகொண்டதன்மேல் உங்களைத் தேடுவதற்காக அனுப்பப்பெற்ற ஹநுமான் என்ற வானரன் நான்.

சீதை:—(தனக்குள்) எவனாயிருந்தாலுமென்ன? ஆர்யபுத்ரரின் திருநாமத்தைச் சொல்லிவந்ததால் இவனுடன் வார்த்தையாடுவேன். (வெளிப்படையாய்) நல்லோனே! ஆர்யபுத்திரரின் விருத்தாந்தம் என்ன?

ஹநுமான்:—நீங்கள் கேட்கவேண்டும்.

ஜநஸ்தாநவரிஷ்டம் வாக்யம் ஸக்ஷாத்வேக்ஷம்
தவ வாக்யஹிதார்த்தா வீதராவணஹ்ருதீக்ஷ ।

வஹதி விகதயெயபிம் ஹியநாநம் ஶரீரம்
ஜநவிஜஶரதஹ்யம் வாஷ்வயபிரகரவாக்ஷூ ॥

அவர், உணவின்மையால்வருந்துவதும், வெளுத்ததும், வாடிய வதனத்துடன்கூடியதும், தங்களுடைய சிறந்த குணங்களை நினைத்து நினைத்து அழகுகுன்றியதும், தைர்யமற்றதும், தேய்கிறதும், மன்மதபாணங்களால் எரிக்கப்பட்டதும், அழுகையால் கலங்கிய கண்களையுடையதுமான சரீரத்தை எவ்வாறோ தாங்குகிறார்.

சீதை:—(மனத்துக்குள்) இவ்வாறு சோகமடைகிற ஆர்யபுத்ரரின் செய்தியைக் கேட்டு நான் வெட்கமடைகிறேன். இந்த வானரன் உண்மையை உரைப்பானானால், ஆர்யபுத்ரரின் பிரிவாற்றாமையும் எனக்கு நன்மையையே பயக்கிறதென்று நினைக்கிறேன்; ஆர்யபுத்திரருக்கு என்னிடத்தில் இருக்கிற அன்பையும், அவருடைய சிரமத்தையும் கேள்விப்பட்டு என்னுடைய மனமானது இன்பத்துக்கும் துன்பத்துக்கும் நடுவே ஊசலாடுவதுபோலும். (வெளிப்படையாய்) நல்லோனே! உங்களுடன் ஆர்யபுத்திரருக்குச் சேர்க்கை எவ்விதம் நேர்ந்தது?

ஹநுமான்:—நீங்கள் கேட்பீர்களாக.

ஹத்வா வாலிநமாஹவே கபிவரம் த்வத்காரணாத்ரஜம்
ஸுக்ரீவஸ்ய க்ருதம் நரேந்த்ரதநயே! ராஜ்யம் ஹரீணாம் ததஃ।
ராஜ்ஞா த்வத்விசயாய வாலி ஹரயஃ ஸர்வாதிஶஃ ப்ரேஷிதா
ஸ்தேஷாமஸ்ம்யஹமேகஏவ பநாத்த்வாம் ஸம்பாதிவாக்யாத்கதஃ ॥

அரசர்புதல்வியே! தங்களையுத்தேசித்து, மூத்தவனான வாலியைப் போரில்வதைத்து, வானரராஜ்யம் சுக்ரீவனுக்கு அளிக்கப்பெற்றது. அந்த வானரவரசனால் (சுக்ரீவனால்) உங்களைத் தேடுவதற்காக வானரர்கள் எல்லாத் திக்குக்களுக்கும் அனுப்பப்பட்டார்கள்; அவர்களுக்குள் நான் (சம்பாதியென்ற) கழுகின் வசனத்தால் இன்று தங்களையடைந்தேன்.

மேலும் இதுபோல்,

சீதை:—ஆர்யபுத்திரரை இவ்வாறு வருத்தமடையச்செய்கிற தெய்வங்களுக்குக் கருணையில்லையே!

ஹநுமான்:—தேவி! வருத்தம் அடையவேண்டாம்; இராம பிரானேவெனில்,

க்ருஹீதமஹாசாபோ வ்ருதோ வாநரஸேநயா ।
ஸம்ஹர்தும் தஶக்ரீவம் லங்காமேவாபியாஸ்யதி ॥

(கையில்) பெரியவில்லுடன், வானரசேனையால் சூழப்பட்டுத் தசக்ரீவனைக் களைவதற்காக இலங்கைக்கு வருவார்!

சீதை:—நல்லோனே! நான் கனவுகண்டேனா? உண்மைதானா? எனக்குத் தெரியவில்லையே!

ஹநுமான்:—(தனக்குள்) ஹா! கஷ்டம்.

ஏவம் ஸம்யக் பரிஜ்ஞாய பர்த்தாரம் பர்த்ருவத்ஸலா ।
ந ப்ரத்யாயதி ஶோகார்த்தா யதா தேஹாந்தரம் கதா ॥

கணவரிடம் மிக்க அன்புகொண்டவரான இவர், கணவரை நன்றாய்த் தெரிந்துகொண்டிருந்தும், துக்கமிகுதியால் வேறு தேகத்தை அடைந்தவர்போல், எனது வசனங்களை நம்பவில்லையே!

(வெளிப்படையாய்) இப்பொழுது நான்,

ஸுருசிரவரசாபபாணபாணிம்
பதிமிஹ ராஜஸுதே! த்வாநயாமி ।
பவ ஹி விகதஸம்ஶயா மயி த்வம்
நரவரபார்ஶ்வகதா விநீதஶோகா ॥

அரசர்புதல்வியே! சிறந்த வில்லுடனும், அம்புகளுடனும் விளங்குகிற திருக்கைகளையுடையவரான தங்களுடைய கணவரை இங்குக் கொணர்வேன்; என்மீது சந்தேகங்கொள்ளற்க; துக்கத்தைவிட்டு நரசிரேஷ்டரான ஸ்ரீராமபிரான்பக்கலில் தாங்கள் இருப்பீர்கள்.

சீதை:—நல்லோனே! என் நிலைமையைக் கேட்டால் ஆர்ய புத்திரர் எவ்வாற்றுன் வருத்தமடையாமலிருப்பாரோ, அவ்வாறே அவரிடம் உரைப்பாயாக.

ஹநுமான்:—தங்களுடைய ஆணைப்படி.

சீதை:—செல்வாயாக; காரியம் நிறைவேறட்டும்.

ஹநுமான்:-(சற்றுத்தூரம்சென்று) நான்இங்குவந்ததை இராவணனிடம் எவ்வாறு தெரிவிப்பேன்? இருக்கட்டும், தெரிந்தது.

ஸாரஸ்யந்தருணஜாலம் ஸத்புஷ்பாபிராமம்
ஸாராஸிதாம்புஷ்டம் தோயதாபம் த்ரிகூடம்।
காலசரணவிக்ஷேபை: கானனம் ஸஞ்சூர்ணயித்வா
விகதவிஷயவஶ்யம் ராக்ஷஸேஶம் கரோமி ॥

குயிற்குழாங்கள் நிறைந்ததும், தாமரைக்கொத்துக்களால் வனப்புவாய்ந்ததும், அழகிய மரங்கள் அடர்ந்ததும், முகில்போன்றதுமான 'திரிகூடம்' என்றகானகத்தைக் கைகால்களால் உதைப்பதால் பொடிப்பொடியாக்கி, அரக்கராஜனை விஷயங்களால் ஏற்பட்ட கொழுப்பை விட்டவனாக (நான்) செய்வேன்.

(இருவரும் வெளியேறுதல்.)

இரண்டாவது அங்கம் முற்றிற்று.

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமி சாஸ்த்ரி, B.A., B.L.

மதுரை.

யவனர்வரலாறு.

[யாழ்ப்பாணம் ஸ்ரீமான். த. இராமநாதபிள்ளை B.A., (LOND.) அவர்கள்.]

(உஅரு-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

உண்ணாட்டுக்கலகம்.

உரோமர், கீழ்மக்கள் மேன்மக்கள் என இருகட்சியினராகப் பிரிந்து கலகப்பட்டுப் போர்புரியவும் தொடங்கினர். கீழ்மக்கட் கட்சி குடியரசுக்கட்சி யெனப்படும். குடியரசுக்கட்சியினருள் மாரியஸ் என்னுந் தலைவன் பெரிய யுத்தவீரன். கி. மு. 111-ஆம் ஆண்டு உரோமர் நுமிடியாநாட்டை யுகுர்த்தா அட்கேபால் என்னுஞ் சகோதரர் இருவருக்கும் அளித்தாராக, யுகுர்த்தன் உடன்பிறந்தானுக்குரிய நாட்டை வௌவிக் கேட்டானென்னும் நகரைச் சூழ்ந்து அட்கேபாலைக் கொன்று நுமிடியாநாடு முழுவதையும் ஒருகுடைக்கீழ் ஆண்டான். மேலும் பக்கஸ்மன்னன் மகளை மணந்து காதாக்கோநாடொழிந்த லிபியாநாடு முழுவதையும் ஆட்சிசெய்தான். உரோமர் மெற்றேலஸ் என்னும் தலைவனை அவர்களை அடக்கும்படி அனுப்ப யுகுர்த்தா சமாதானம்வேண்டினன். மெற்றேலஸ் மறுத்துப் போரைநடத்தினன். கி. மு. 108-ஆம் ஆண்டு யுகுர்த்தா குதிரைப்படைகளால் உரோமரை வென்றான். குடியரசுக்கட்சி தலையெடுத்தமையால் மாரியஸ் கி. மு. 107-ஆம் ஆண்டு இணைத்தலைவனானன். அவன் யுகுர்த்தாவை அடக்குதற்குப் படையோடு சென்றான். சுல்லா என்னும் வீரன் உரைத்த உபாயங்களால் மாரியஸ் என்னும் தலைவன்படை அழியாமல் தப்பியது. கி. மு. 105-ஆம் ஆண்டு மாரியஸ் யுகுர்த்தாவின் இவுளிப்படைக்கு உரோமர் குதிரைப்படை நிகராகாதெனப் படைத்திறந்தெரிந்தானாதலின் சூழ்ச்சியால் யுகுர்த்தாவைப் பிடித்தற்குச் சுல்லா என்பவனோடு ஆலோசித்தான். மாமன் பக்கஸ் மூலமாக மாரியஸ் யுகுர்த்தாவை ஒரு கூட்டத்திற்கு அழைத்துச் சிறைப்படுத்தினன். அவ் வீரச்செயல் செய்தபின் மாரியஸ் ஊர்வலஞ்செய்து கொண்டாடினன்.

கிம்பிரியர்.

கி. மு. 113-ல் தானியூபி நதிக்கரையில் வசித்த கிம்பிரியர் தம்மூரைத்துறந்து மேற்குநோக்கினேர், வடவித்தாலியில்தோன்றி உரோமர்தலைவனை வென்றும் இத்தாலியாவுட் புகாமல் ஏகினர்கள். கி. மு. 109-ஆம் ஆண்டு யுனியஸ் சில்வானுஸ் என்பான் கிம்பிரியரை எதிர்த்தானாக, கிம்பிரியர் நாடு இரந்தன ரென்றும் சில்வானுஸ் நகைத்துப் பழித்தானென்றும் கூறுப. கி. மு. 105-ஆம் ஆண்டு லோங்கினஸ் கசியஸ் என்பான் கிம்பிரியரோடு பொருது மாண்டான். கிம்பிரியர் ஸ்கோறஸ் என்னும் உரோமர்தலைவனையும் வென்றனர். பின்பு மச்சிமஸ், காய்ப்பியோ என்னும் இரு தலைவர்களையும் கிம்பிரியர் அரோசியக்களத்தில் வென்று ஐபீரியதேசம் சென்றனர். தோல்விக்குற்றங்காரணமாகக் காய்ப்பியோவினது நிலங்களை மேன்மக்கட்சபை கவர்ந்தது. கிம்பிரியர் ஐபீரியரால் துரத்தப்பட்டு வடக்குக்கல்லியநாடு புக்குப் பெல்காயிநாடடைந்து ஆங்கிருந்து துரத்தப்பட்டு இத்தாலியாவைப் பின்னரும் நோக்கினர்.

கி.மு. 102-ஆம் ஆண்டு நான்காம் முறை மாரியஸ் இணைத்தலைவனாகத் தெரிந்தெடுக்கப்பட்டான். கிம்பிரியர் மூர்க்கராகையால் உரோமர்சேனை நடுக்கமுற்றதெனினும் மாரியஸ் சேனையை உற்சாகப்படுத்திச் சென்று ரோன் நதிக்கரையில் கிம்பிரியனைப் புடைத்துக் கலைத்தான். கிம்பிரியரின் ஒருபகுதியார் போ நதிக்கரையடைய, தலைவன் கற்றுலஸ் என்பான் தானையோடு புறங்கொடுத்தான். கி. மு. 101-ஆம் ஆண்டு மாரியஸ் கிம்பிரியப்படையை வென்று நாசமாக்கினன். இவ்வெற்றிகளால் தலைவன் மாரியஸ் புகழ்பெற்றானாகிப் பலமுறை இணைத்தலைவனானன். மாரியஸ் குடியரசுக்கட்சியைச் சேர்ந்தோனாகையால் குடியரசுக்கட்சியினர் தலையெடுத்தனர். மாரியஸ் தலைமைவகித்தும் கீழ்மக்களுக்கு ஒரு நன்மையுஞ் செய்யவில்லை.

கி. மு. 104 ஆம் ஆண்டு அடிமைகள் தம் தலைவர்கள் செய்யும் இடும்பைகளைத் தாங்கமுடியாமல் போர்க்கெழுந்து மாரியஸ் என்னும் தலைவனால் அடக்கப்பட்டனர். சற்றேனியஸ் என்பான் கீழ்

மக்களைக் குடியேற்றவேண்டுமெனப் பிரேரித்தான். மாரியஸ் தன் கட்சியை எதிர்த்த சற்றேனியஸ் என்னும் தேசத்தொண்டனைக் கொன்முன். கி. மு. 95-ஆம் ஆண்டு இத்தாலியரெல்லாம் உரோமாபுரத்தைவிட்டு நீங்கும்படி மேன்மக்கட்சபையோர் தீர்மானித்தனர். கிராக்கஸ் என்னும் கமலியக்கத்தலைவனை எதிர்த்துக்கொன்ற டுறாசுஸ் என்பேரன் மகனை டுறாசுஸ் என்பான் குடியரசுக்கட்சித் தொண்டனுகி அரசாங்கத்தினர் கீழ்மக்களுக்குத் தானியக்கொடை குடிநிலமளித்தல் குடியோம்பல் முதலியன செய்யவேண்டுமெனப் பிரேரித்தான். டுறாசுஸ் இத்தாலியர் யாவர்க்கும் உரோமர் குடியாகும் உரிமைகளை அளிக்கவேண்டுமெனப் பிரேரித்தமையால் பொதுமக்கள் அவனை வெறுத்தனர். இஃதுணர்ந்த மேன்மக்கள் பொதுமக்களை ஏவிக் கிளர்ச்சிபண்ணி டுறாசுஸ் என்னும் தொண்டனைக் கொன்முர்கள்.

கட்சிப்போர். கி. மு. 90—88.

நடுப்பிரிவினரும் கீழ்மக்களும் மேன்மக்களும் இத்தாலியக் குடிகளுக்கு உரோமர்குடியுரிமை அளித்தானெனச் சினந்து சனசமூக முன்னேற்றத்துக்கு ஈடுபட்டு உழைத்துவந்த டுறாசுஸ் என்பவனைக் கொன்முர்களாக, இத்தாலியர் இனித் துயரம் சகிக்கமுடியாதெனவெண்ணிப் போர்க்கெழுந்தனர். டுறாசுஸ்தொண்டன் துணைவரை மேன்மக்கள் விசாரணைசெய்து அரசபக்தியில்லாதாரெனத் தண்டித்தனர். அக்கொடுங்கோன்மையால் மேன்மக்கள் இத்தாலியரது கோபாக்கினிக்கு நெய்வார்த்தார்களெனக் கூறலாம்.

கடும்போர் தொடங்கிற்று. தென் இத்தாலியரும் மத்திய இத்தாலியரும் எங்கும் போர்க்கோலத்தோடு கிரண்டனர். கம்பேனியாவிலும் எற்றுரியாவிலும் நிலங்களையுடைய செல்வர்கள் மிகுந்திருந்தமையால் அந்நாட்டோர் அமைதியாகவேயிருந்தனர். மேன்மக்களுக்கு எதிராக எழுந்த இத்தாலியர் ஒரு ஐக்கியக்கூட்டமாகிக் கோர்ப்பினியத்தைத் தலைநகராக்கிச் சபையொன்றை நிறுவித் தலைவர்களையும் தெரிந்தெடுத்தனர். பம்பாடியஸ் சைலோ என்னும்

ஒரு மார்சியன் மத்தியநாடுகளுக்கும், பப்பியஸ்முயிற்றிலஸ் என்னும் ஒரு சம்நிதியன் தென்இத்தாலியநாடுகளுக்கும் தலைவராக நியமிக்கப்பட்டனர். மத்தியநாட்டுத் தலைவனை எதிர்த்துச் சயித்தற்கு றுற்றிலியஸ் லுப்பஸ் என்பவனையும் தென்இத்தாலியநாட்டுத் தலைவனைச் சயித்தற்கு யுலியஸ்கைசரையும் மேன்மக்கட்சபையோர் நியமித்தனர். வடக்கிலிருந்த லுப்பஸ் போரிற் றுஞ்சினுன். தெற்கிலிருந்த யுலியஸ்கைசர் தோற்றுன். தென்இத்தாலியத்தலைவன் முயிற்றிலஸ் மேன்மக்கட்சபையினர்க்கு நட்பான நகரங்களை நெருக்கி வருத்தினுன். மேன்மக்கள் இத்தாலியருக்கு உரிமைகளை அளிக்காவிட்டால் அவர்களைத் தாம் ஆளவியலாதென உணர்ந்து சில உரிமைகளை அளித்தார்கள். இதுகாறும் அரசாங்க விரோதிகளை விசாரணைசெய்யும் உரிமை நடுப்பிரிவினரிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு சிறுசபையின் உரிமையாயிருந்தது. இச்சபையினரைத் தெரிந்தெடுக்கும் உரிமை பொதுஜன சபைக்கு உரியதாகுமெனப் புளேற்றியஸ் பிரேரித்தான். அவ்வளவில் யுலியஸ்கைசரது தீர்மானத்தால் தெரிவுரிமை இத்தாலியரெல்லாருக்கும் அளிக்கப்பட்டது. மேற்கூறிய தீர்மானம்செய்யப்பட்டு இரண்டுமாதங்கள் செல்லுமுன் இத்தாலியர் யாவராயினும் பகைதுறந்து உரிமைகளை வேண்டுவாராயின், உரிமைகள் அளிக்கப்படுமெனப் புளேற்றியஸ் பைப்பிரியஸ் என்பான் தீர்மானித்தான்.

கி. மு. 89-ஆம் ஆண்டு, இணைத்தலைவன் பம்பியஸ் ஸ்றுபோ அஸ்கூலம்நகரைப் பாழாக்கினுன். படைத்தலைவனுன சுல்லா கம்பேனியாநாடடைந்து முயிற்றிலஸ் என்பவனைச் செற்றுனுக, பம்பாடியஸ் என்பவன் இத்தாலியப்படை முழுவதற்கும் தலைமை பெற்றுப் போரை நடாத்தினுன். கி. மு. 88-ஆம் ஆண்டு, இத்தாலியப்படை வலிகெட்டுத் தோல்வியடைந்தது. பம்பாடியஸ் என்பவனும் இறந்தான். இவ் வித்தாலியக்கட்சியுத்தத்தின்பயனுக இத்தாலியக்குடிகள் யாவரும் தாம்தாம் கவர்ந்த பல உரிமைகளையும் பெற்றனர். 300,000 வீரர் மாண்டார்களென்றும் 80,000

குடிகள் உரிமைபெற்றனரென்றும் வரலாறுகள் கூறும். யுத்த முடிவில் இத்தாலியர் உரோமசாதிகளுள் எட்டில்மாத்திரம் சேர்க்கப்பட்டனராகையால் கட்சிக்கலகம் பின்னரும் இடையிடையே மூண்டது.

கோணிலியஸ் சுல்லாவை மேன்மக்கள் மதிருடாற்றிஸ் என்னும் மன்னனுக்கு எதிராகப் போர்புரியும்படி ஏவினார்கள். மாரியஸ் தன்னைத் தலைவனாக நியமிக்கவில்லையெனச் சினந்தான். சுல்பீசியஸ் றூவஸ் என்னும் மேன்மகனொருவன் இத்தாலியரை 35 சாதிகளிலுஞ் சேர்க்கவேண்டுமெனப் பிரேரித்தான். அதனுடன் சுல்லாவை நிறுத்தி மாரியஸைத் தலைவனாக நியமிக்கவேண்டுமெனவும் பிரேரித்தான். இப்பிரேரணையை இணைத்தலைவரும் மேன்மக்களும் எதிர்த்தார்களாயினும், இத்தாலியர் ஆரவாரத்துடன் திரண்டு பிரேரணையைத் தீர்மானமாக்கினார்கள்.

நோலா என்னும் இத்தாலிய நகரை முற்றுகையிட்டிருந்த சுல்லா குடியரசுக்கட்சியினரை அடக்குதற்குப் படையோடு உரோமாபுரத்திற்குச்சென்று சுல்பீசியஸ் றூவஸ் என்பவனைக் கொன்று மாரியஸ் என்னும் வீரனைச் சிறைப்படுத்தினான். சிறையிலிருக்கும் மாரியஸைக் கொல்லும்படி கிம்பிரிய அடிமையொருவனைச் சுல்லா ஏவினான். அவ்வடிமை ஈட்டியை ஓங்கிச்செல்ல, மாரியஸ் "நீயாடா கிம்பிரியரைச் செற்ற என்னைக் கொல்லவந்தாய்?" என உரப்ப, அடிமை நடுநடுங்கித் திரும்பினான். மாரியஸைக் கொல்லுதல் தேவருக்கு விருப்பமில்லையென எண்ணி மேன்மக்கள் அவனை விடுதலையாக்கினர். கி. மு. 88-ஆம் ஆண்டு சுல்பீஸியஸினுடைய தீர்மானம் பிரமாணமன்றென்று சுல்லா அறிக்கையிட்டுக் கீழ்மக்கட்சபையின் பிரேரணை பிரமாணமாதற்கு மேன்மக்கட்சபையால் அங்கீகரிக்கப்படவேண்டுமென்றும் அறிவித்தான்.

அவ்வருடம் சுல்லாவின் கட்சியை எதிர்த்த தலைவன் சின்னா என்பவன் இணைத்தலைவனாகத் தெரிந்தெடுக்கப்பட்டான். சுல்லா சின்னாசியா யுத்தத்தை நடாத்தற்குப் புலம்பெயர்ந்தானாக, சின்னா நாட்டினின்றும் அகற்றப்பட்ட குடியரசுக்கட்சியினருக்குத் தம்

நாட்டிற்குத் திரும்புவதற்கு உத்தரவளிக்கமுயன்றான். மற்ற இணைத்தலைவன் ஒக்ரேவியஸ் அவனை எதிர்த்தான். இணைத்தலைவர் இருவரும் கடைவீதிகளிற் கலகப்பட்டனர். கலகத்திற் சின்னு கட்சியார் தோல்வியடைய, அரசியன்முறைகட்குமாறாக மேன்மக்கள் சின்னுவை இணைத்தலைமையைத் துறக்கும்படி ஏவினர். இத்தருணத்தில் நோலாநகரத்தை முற்றுகையிட்டிருந்த படை சின்னுவின்கட்சியைச்சார்ந்தது. வீரன் மாரியஸ் சின்னுகட்சியைச்சார்ந்து தனது தானையை உரோமாபுரிவாயிலில் நிறுத்தினன். மேன்மக்கள் சின்னுவையும் மாரியஸையும் குருதியாடவேண்டாமென வேண்டித் தலைவர்கள் இருவரையும் நகரத்துள் ஏற்றனர். நகர்க்கதவைத் தாழிட்டு அடைத்தபின் குடியரசுக்கட்சியினர் மேன்மக்களைத் தேடித்தேடிக் கொன்றனர். ஒக்ராவியஸ், யுலியஸ் கைசர், வேர்செல்லாப் போர்வீரன் கற்றுலஸ் முதலியோருங் கொல்லப்பட்டார்கள்.

கி. மு. 87-ஆம் ஆண்டு மாரியஸ் ஏழாம் முறை இணைத்தலைவனாகத் தெரிந்தெடுக்கப்பட்டான். மாரியஸ் சொற்பகாலத்தில் இறந்தானாக, சின்னு தலைவனாகிச் சுல்பீஸியஸின் பிரமாணங்களை நாட்டிச் சுல்லாவின் படைத்தலைமையை நீக்குதற்குப் பிளாக்கஸ் என்னும் படைத்தலைவனைச் சின்னசியாவிற்குப் போகும்படி கற்பித்தான். பிளாக்கஸ் என்பவனுடையபடை தலைவனைப் பகைத்துச் சுல்லாவின்கட்சியைச் சேர்ந்தது. சுல்லா தான் உரோமாபுரம் திரும்புவதாக மேன்மக்கட்கு அறிவித்தான்.

கி. மு. 83 ஆம் ஆண்டு கோனீலியஸ் ஸ்கிப்பியோ சம்நிதியப் படையோடு சுல்லாவின்படையை எதிர்த்தான். சுல்லா 30000 படையோடு பிறண்டுசியத்தில் இறங்கி ஒரு தலைவனைப் புடைத்து மற்றைத்தலைவனைத் தன்கட்சியைச் சேரும்படி அழைத்தான். பம்பியஸ் என்னும் படைத்தலைவன் குடியரசுக்கட்சித்தலைவனாகிய நோர்பாலஸ் என்பவனை வென்றான். ஸ்கிப்பியோவின்படை சுல்லாகட்சியைச் சார்ந்தது. கி. மு. 82-ஆம் ஆண்டு சுல்லா கம்பேனியாநாடடைந்து குடியரசுக்கட்சியினரை அடக்கி உரோமாபுரத்துக்குச் சென்றான். குளூசியத்தில் கார்போ என்னுங்

தலைவன் சுல்லாவோடு பொருது வென்றான். பின்பு கார்போ வின்படையைச் சுல்லா வென்றான். சுல்லா சம்நிதியப்படையை வென்று உரோமாபுரத்தைக் காத்ததுமன்றி நோலாநகரத்தையும் அடக்கினான். சுல்லா குடியரசுக்கட்சியினரை அடியோடே அழித் தற்கு எண்ணி மேன்மக்கட்குப் பகையாக எழுந்த நாடுநகரங்களில் உரியோரை விலக்கி அந்நாடுநகரங்களில் தனக்குரிய தொல் வீரரைக் குடியேற்றினான். மேன்மக்கள் நாட்டை ஆளும்படி சுல்லாவைத் தனித்தலைவனாக்கினார்கள்.

சுல்லாவினுடைய ஆட்சியில் கீழ்மக்கட்காவலர் தெரிந் தெடுக்கப்படாமையால் சுல்லாவின் தனித்தலைமை கொடுங்கோன் மை யெனக் கூறப்படும். சுல்லா தான் நினைந்தவாறு பிரமாணங் களை ஆக்கிக் குடியரசுக்கட்சியினரைத் துன்புறுத்தினான். 5000 மக்களை அரசபக்தி இல்லாதாரெனக் கொல்வித்தான்.

சுல்லாவின் தனித்தலைமை.

சுல்லா கீழ்மக்கட் காவலரைக் கீழ்மக்கட்சபையில் யாதொரு தீர்மானமும் பிரேரிக்கக்கூடாதெனக் கட்டளையிட்டான். அத னுடன் வீரர்சபையின் தீர்மானத்தைத் தடுக்கும் ஆற்றல் காவ லர்க்கு இல்லையெனவும் மறுத்தான். நடுப்பிரிவினின்று தெரிந் தெடுக்கப்பட்ட சபைக்கு நீதிவிசாரணைசெய்யும் உரிமை இல்லை யென மறுத்து, அவ்வுரிமை மேன்மக்கட்சபையினர்க்கே உரிய தென ஒரு பிரமாணத்தை ஆக்கினான். கொலை, களவு முதலிய தீ வினையாளரைத் தண்டித்தற்குச் சில நீதிபதிகளையும், நிலங்கவர்தல் ஆசாரக் குற்றம் முதலியசெய்தாரைத் தண்டித்தற்குச் சில நீதிபதி களையும் ஏற்படுத்தினான். ஒருதலைவரும் இருதொழில்கள் செய்யக் கூடாதெனக் கட்டளைபிறப்பித்தான்.

கீழ்த்தலைவர் எண்மரை நகரத்தலைவராகவும் பிறநாட்டுத்தலைவ ராகவும் ஏற்படுத்தினான். ஒருவருடங் கழிந்தபின் அவர்கள் ஆட்சி நாடுகளுக்குத் தேசாதிபதிகளாக அனுப்பப்படுவர் என்றும் அறி வித்தான். இத்தேசாதிபதிகள் செங்கோல்செலுத்துகிறார்களோ வென விசாரணைசெய்தற்கு ஒரு சிறுசபை ஏற்படுத்தப்பட்டது.

கி. மு. 79-ல் சுல்லா தன் சீர்திருத்தமுறைகளை நாட்டிக் குடியரசுக்கட்சியினரை அடக்கினன். அடக்கியபின் கூமாயி நகருக்குச் சென்று ஆறியிருக்க எண்ணினன்.

கி. மு. 78-ஆம் ஆண்டு சுல்லா இறந்தானாக லேப்பிடஸ் கீழ் மக்கட்காவலர்க்குப் பழைய உரிமைகளை அளிக்கவேண்டுமென்று பிரேரித்தான். அதனுடன் நாடுகடத்தப்பட்ட குடியரசுக்கட்சியினருக்கு நாடுதிரும்புதற்கு விடையளிக்கவேண்டுமெனவும், அரசாங்கத்தினர் வறியோருக்குத் தானியக்கொடையளிக்க வேண்டுமெனவும் பிரேரித்தான். மேன்மக்கள் தானியக்கொடையளித்தற்கு உடன்பட்டார்கள். லேப்பிடஸ் இணைத்தலைவனாகத் தெரிந்தெடுக்கப்படாமையால் சாடினியாத் தீவுக்கேகி ஆங்கு அரசாங்கவிரோதியாயிருக்கும் சேட்டோறியனுடையகட்சியைச் சேர்ந்தான்.

குடியரசுக்கட்சி வலுத்தகாலத்திலும் கீழ்மக்கள் தாம் பெற வேண்டிய உரிமைகள் எல்லாவற்றையும் பெறவில்லை. கீழ்மக்கள் ஒழுக்கங்குன்றித் தூர்த்தராயும் தீவினையாளராயும் குடியராயும் களியராயும் மடியராயும் வெறியராயும் வேடிக்கை விருப்பினராயும் சிற்றின்பம் விழைந்து ஊணுக்கும் வாட்போர்க்காட்சிக்குமாகத் தமது தெரிவுரிமைகளை அபேட்சகர்களின் நற்குணங்களையும் தேசாபிமானத்தையும் தேராது செலுத்தித் தமக்கும் தமது சந்ததியாருக்கும் உரோமராச்சியத்துக்கும் உரோமநாகரிகத்துக்கும் கேடுவிளைத்தார்கள். மேன்மக்களும் தம் சாதியாரான கீழ் மக்களுக்கு உரிமைகளை அளியாமல் இறுதியில் அக்காரணத்தால் தமக்குங் கேடுவிளைத்துக்கொண்டார்கள்.

ஒரு சாதி முன்னேற்றமடையவேண்டுமானல் அச்சாதியினரான மக்கள் யாவரும் ஒருங்குதழைத்து ஓங்கும் வழிவகைகளைத் தெரிந்து பொதுநன்மைக்குரிய சனசமூக சீர்திருத்தங்களை ஏற்படுத்தவேண்டுமென்பது இக்கீழ்மக்கள்வாழ்க்கை வரலாற்றால் இனிது புலப்படுகின்றது.

[தொடரும்.]

பழனிக்கோவை.

[உசுச-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

௩. இடந்தலைப்பாடு.

4. பொழிலிடைச் சேற லிடந்தலை சொன்ன
வழியொடு கூட்டி வகுத்திசி னோரே.

பொழிலிடைச்சேறல்.

முன்மதி தீண்டொரு கம்பத்தி னூசி முனையினின்றோர்
பொன்மதி ளேற லரிதோமுன் கூட்டும்புத் தேளுளதால்
நின்மதி யென்றயற் கோத்துரைத் தோர்பழ னிச்சிலம்பிற்
சென்மதி யேயினி நன்மதி வாணுதல் சேர்பொழிற்கே. (49)

ஆடிடத்தெய்தி யரிவையையண்ணல்
கூடிடத்தன்னுட் குறித்துச்சென்றது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—இடந்தலைப்படுதல்.

இடந்தலைப்பாடு முற்றும்.

---

௪. பாங்கி மதியுடம்பாடு.

5. சேற றுணிதல் வேழம் வினுதல்
கலைமா வழிபதி பெயர் வினுதலே
மொழிபெறு துரைத்தல் கருத்தறி வித்தல்
இடை வினுதலோ டிவையீ ரைந்தும்
மடவார் றோழிக்கு மதியுடம் படுத்தல்.

1. பாங்கியிடைச்சேறல்.

தளங்கண்டு வேற்பணி கண்டோர் பழனித் தடஞ்சிலம்பிற்
குளங்கண்டென் றோபயிர் செய்வா ரினிமங்கை கூடரியள்

வளங்கண்ட தோழியைக் கண்வேற்புண் ணுற்று மருந்தைக்கண்டென்
னுளங்கண்ட செல்லலெல் லாஞ்சொல்லி யாறுவ னெல்லையிலே. ()

எந்திழைதோழியை யிரந்துகுறையுறப்
போந்திடுவேனெனப் புரவலன்சென்றது.

மெய்ப்பாடு—அழுகையைச்சார்ந்த பெருமிதம். பயன்—தோழிக் குணர்த்தி அவளான்முடிப்பலெனக்கருதி ஆற்றுமைநீங்குதல்.

2. குறையுறத்துணிதல்.

இன்னகை கூடிற்றென் னெண்ணமெல் லாமினிச் சொல்வனிவர்
பொன்னே மணியே யெனக்கிடைத் தார்புரு கூத்னையோர்
மன்னே யெனச்செய்த வேலோர் பழனி மயில்கடைக்கண்
டன்னே ரிவளென்று தேசிகர் போலுண்மை சாற்றியதே. (51)

இருவருமுளவழிப் பொருவருவேலோன்
முறைபெறக்கண்டு குறையுறத்துணிந்தது.

மெய்ப்பாடு—அழுகையைச்சார்ந்த பெருமிதம். பயன்—மதியுடம் படுத்தற் கொருப்படல்.

3. வேழம்வினுதல்.

முருகமர் தீங்கனி யாலுல கேழ்புக்கு முக்கணன்பால்
வருகரு ணைநிதி போல்வோர் பழனி மலைமயில்காள்
இருகவுண் மும்மத நால்வா யிருப்பு நெருப்பின்மருப்
பொருகரி வந்ததுண் டோவும்பர் கோன்செற்ற வோங்கலொத்தே.

மாழையுண்கண்ணியர்வதிந்தவவ்வயின் வேழம்வினுஅய்வேந்தன்போந்தது.

4. கலைமாவினுதல்.

ஆரங் கமழ்மணி மார்பார் கடம்பர்வை யாபுரிபோல்
ஈரங் கமழ்நறுந் தார்க்குழ லீருடம் பெங்குமெள்ளின்
கூரங்கங் குத்தற் கிடமின்றிக் கோல்கள் குளிப்பவொரு
சாரங்கஞ் சாரங்கஞ் சாரங்கம் போல்வரிற் சாற்றுமினே. (53)

கொலைவேலண்ணல் கலைமாவினுயது.

5. வழிவினுதல்.

மீனுறு கூடித் திருமுலைப் பானல்கி மேன்மைபெற
வானுறு தந்த மகவோர் பழனிநும் மாண்பதிக்கு

நாஞவிங் கேயெனிற்.........மீர்கொங்கை நண்ணுதற்குத்
தேனுறு கூந்தன்மின் னீர்வழி தானென்று செப்புமினே. (54)

எழிறிகழ்வேலோன் வழிவினவியது.

6. பதிவினுதல்.

சேந்தப்பி ரான்பழ னித்தோகை மீர்செம் மணிக்கழங்கு
காந்தட்குட் டப்பிச் சுனைவிழுங் காட்சி கதிருதித்துப்
பாந்தட்பல் வாய்ப்பட் டடனே கடல்விழும் பான்மையெனக்
கூந்தற் பிடிகள்கண் டாடுமூ ரெது கூறுகவே. (55)

படர்நெறிவினவிய சுடர்முடியண்ணல், மடவரன்மாதரைத் தடாகர்வினவியது.

7. பேர்வினுதல்.

செம்மலை யான சிவன்போற் றிருவுருச் சேர்ந்துவருங்
கைம்மலை யானைக் கிளையார் பழனியிற் காரிகைமீர்
இம்மலை வாணர்தம் பேர்கேட் கினும்விட மேகுமென்பார்
பொம்மெனப் பேருரை யீர்மதன் கோல்விடம் போய்விடவே. (56)

ஊர்வினவியோன் பேர்வினவியது.

8. மொழிபெறுதுரைத்தல்.

அரக்காம்பல் வாய்துகி ராமமிர் தாமுரை தீவிற்கிட்டாச்
சரக்காம்பல் வெண்முத்த மாஞ்சித்தர் வாய்மணி தானுமதாம்
வரக்காம் பலர்செச்சை மார்போர் பழனியில் வாய்திறந்தாற்
குரக்காம்பல் போற்புயத் தார்வவ்வு வேனென்றுட் கொண்டனரே.

வாய்மொழிபெறுதுயமொழியுரவோன்விட்டுரைதோன்றக்கட்டுரைத்தது.

இவை ஆறிற்கும் மெய்ப்பாடு—இளிவரலைச்சார்ந்தபெருமிதம். பயன்—மதியுடம்படுத்தல்.

9. கருத்தறிவித்தல்.

யாஞ்சிக்கும் பாசத் தளைநீத் தருட்கட வின்னமிர்தை
நீஞ்சிக் குடிக்கக்கண் பார்க்குஞ்செவ் வேள்பழ னிச்சிலம்பில்
வாஞ்சிக்கும் பெண்ணமிர் தன்னீர்நம் மேனியு மாந்தளிரேற்
காஞ்சிக்கும் வஞ்சிக்கும் பூந்தழை வாய்ப்பக் கருதனன்றே. (58)

விருத்தியுரையாற் கருத்தறிவித்தது.

மெய்ப்பாடும் பயனும் அது.

10. இடைவினுதல்.

விதுவட்ட னேர்சண் முகத்தோர் பழனியின் மெய்யன்பர்போன்
மதுவட்ட கைசெவ் விளநீ ரிருமருங் குஞ்சுமத்திக்
கதுவிட்ட காழல்குற் கொங்கையங் காவடி கட்டுமதற்
கெதுவிட்ட மும்மிடை தானே வதுவெங்க னேழையரே. (59)

வயமுறுகழலோ னயமாடியது.

மெய்ப்பாடு—அது. பயன்—விசேடவகையான் மதியுடம்படுத்தல்.

மதியுடம்பாடு முற்றும்.

ரு. இருவருமுள்வழி அவன்வரவுணர்தல்.

6. ஐய நாட லாங்கவை யிரண்டு
மையறு தோழி யவன்வர வுணர்தல்.

1. ஐயுறுதல்.

மைவாள் விழிவள்ளி கொண்கர் பழனிநம் மாண்புனம்விட்
டிவ்வா டவன்கட வானியானைக் கோட்டின்முன் பூட்கையொப்.....
செவ்வாயி னற்புதன் சொல...... வியாழஞ் சிலைதழையாய்க்
கைவாளி பேச்சென்ன வேட்டைசெய் வானென்ன காரணமே.(60)

கற்பித்தவுண்மை காவாதவேந்தை
யற்புற்றபாங்கி யையமுற்றது.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—உசாவி யையந்தீர்தல்.

2. அறிவுநாடல்.

அறியாச் சுரர்செய்யும் போர்வென்று பின்பவ ராய்ந்துதொழ
நெறியாக்கும் வேலர் பழனியி னேர்ந்திவ ரேந்திவந்த
முறியாற் பிணைமுன் னிபம்பெய லூர்நடு மூதுரைத்த
குறியாற் கடனுண்டு வேட்டையெல் லாமுயற் கொம்பெனபவே. ()

வெறிகமழ்தாரோன் குறியுரையாய்ந்து
செறிகுழற்பாங்கி யறிவினுடியது.

மெய்ப்பாடு—மருட்கையைச்சார்ந்த பெருமிதம். பயன்—ஐயந்தீர்தல்.

இருவருமுள்வழி யவன்வரவுணர்தல் முற்றும்.

---

௬. முன்னுறவுணர்தல்.

7. வாட்டம் வினாதல் முன்னுற வுணர்தல்
கூட்டி யுணருங் குறிப்புரை யாகும்.

வாட்டம்வினாதல்.

அள்ளிலை வேலொடு துள்ளிய தோகை யளாந்தகைகால்
வள்ளல்வை யாபுரி நீர்குடைந் தோதட்டை வாய்ந்ததிர்த்தோ
புள்ளொலி கூவி யுரத்துப்பந் தாடிப் புரிசிலம்பின்
விள்ளொலி செய்துகொல் லோவல்லி மேனி மெலிகின்றதே. (62)

மடக்கொடிநடக்கும் வாட்டங்கண்டு
சுடர்க்குழைப்பாங்கி சூழ்ந்துசொல்லியது.

மெய்ப்பாடு—மருட்கை. பயன்—தலைமகட்குற்ற வாட்டமுணர்தல்.

முன்னுறவுணர்தல் முற்றும்.

எ. குறையுறவுணர்தல்.

8. குறையுற்று நிற்ற லவன்குறிப் பறிதல்
அவள்குறிப் பறிதலோ டவர்நினை வெண்ணல்
கூறிய நான்குங் குறையுற வுணர்வெனத்
தேறிய பொருளிற் றெளிந்திசி னோரே.

1. குறையுற்றுநிற்றல்.

கொத்தின் கவரி யிரட்டச் செயும்பணி யுங்குறித்து
முத்தங் குணங்கொண்டு கோவையி லேற்ற வளைமுரற்றத்
தொத்தின் செயல்செய்ப வல்லேற் கொருபணி சொல்லிச்சற்றே
சித்தந் திரும்புமின் செவ்வேள் பழனித் தெரிவையரே. (63)

பெருந்தகைமாதரை யிரந்துகூறிப்
பொறையுற்றமனத்தோன் குறையுற்றுநின்றது.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—குறையுறுதல்.

2. அவன்குறிப்பறிதல்.

விண்புகழ் வேலர் பழனியன் னாள்குழல் வேங்கையொடு
சண்பகம் வேய்ந்தென்கை தட்டைதந் தாலுள்ளந் தான்றழைப்பான்
பண்பயில் வண்டுணும் பூவேய்ந் தயல்செல்லிற் பாவைக்கண்ணால்
கண்படர் தாரு நிழல்வீழு நீரிற் கலங்குவனே. (64)

ஆங்கவன்குறிப்புப் பாங்கியுணர்ந்தது.

3. அவள்குறிப்பறிதல்.

சங்கத் துருத்திர சன்மர்வை யாபுரித் தண்புனத்தே
பைங்கொத்தின் மாவடு மாந்தழை மேனின்ற பண்பிதென்ன
நங்கொத்த பார்வைக் கிமைபகை யாவெண்ணி நோக்குமிந்த
மங்கைக் கிவர்கைத் தழையே யுவகை வழங்குவதே. (65)

ஏழைதன்னுட்கோள் தோழிசொல்லியது.

4. இருவர்நினைவு மொருவழியுணர்தல்.

ஐயன்றன் வேட்டையு மாயிழை காவலு மையமுற்றுப்
பொய்யென்ப தார்செய்ய வேலோர் பழனியிற் புங்கமெண்ணி
வையம்பெட் டான்முயற் கூட்டங்கண் டாய்ந்தவன் மாவையெய்தா
னெய்யென் றிவளு முளரியின் மான்களை யோட்டினளே. (66)

இருவர்நோக்கமு மொருமுறைதெரிந்தது.

இவை மூன்றிற்கும் மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—துணிந்துணர்தல்.

துறையுறவுணர்தல் முற்றும்.

---

௮. நாணநாட்டம், நடுங்கநாட்டம்.

9. பிறைதொழு கென்றல் பின்னு மவளை
யுறவென வேறு படுத்தி யுரைத்தல்
சுனையாடல் கூற றேற்றங் கண்டு
புணர்ச்சி யுரைத்தல் பொதுவெனக் கூறி
மதியுடம் படுத்தல் வழிநாண நடுங்கல்
புலிமிசை வைத்தல் புகலுங் காலே.

(நாணநாட்டம்.)

1. பிறைதொழுகென்றல்.

மேற்றிசை நோக்கும் பழனிச்செவ் வேளெற்றி மீதிலிட்ட
நீற்றிசை வாய்ச்செக்கர் மேற்பிறை தோன்றின நின்கரத்தாற்
போற்றிசெ யாண்டு திதிமாதந் நாளிதைப் போற்றியன்றே
நாற்றிசை யேத்த நலன்புனைந் தாண்மதி நன்னுதலே. (67)

மின்னிடைப்பேதையை வெண்பிறைதொழுகென
நன்னுதற்பாங்கி நாணநாட்டியது.

2. பின்னும் அவளை வேறுபடுத்தியுரைத்தல்.

நன்றாய திம்மலை மானனை யாள்சுனை நானஞ்செய்யச்
சென்றா ளவளென் றயிர்த்தேன் பழனிச்செவ் வேடந்தையோர்
மின்றா யெனவந்த வாறுகு நீநுதல் வேர்வடங்க
நின்றால் வரையணங் கேயெய்து மாதுன் னிழலொப்பனே. (68)

சிறடிமடந்தையை வேறுபாடுகண்
டிணங்குறுபாங்கி யணங்கென்றது.

3. சுனையாடல்கூறல்.

சேயார் பழனிக் குமரேசர் மாமன் சிமிழ்ப்பிற் சென்று
வேயாரும் யாழ்வல்ல நாரத னுடிய மென்சுனைபோ
னீயா டியசுனை நானுஞ்சென் றுடுவ னீயுமென்னை
யாயாது வேற்றுருக் கண்டிகழ் வாய்கொ லணங்கரசே. (69)

புனையிழைசெயலைச் சுனையின்மேல்வைத்து
நனைநகைப்பாங்கி நாணநாட்டியது.

4. தோன்றக்கண்டுபுணர்ச்சியுணர்த்தல்.

வினைப்போ ரடக்கிய வேல்வேள் பழனியின் மின்னனையாய்
தனைப்போற் குளத்தைப் புனலாற் பெருக்கியுந் தண்மதுப்போல்
நினைப்போடுஞ் சிந்தையைக் கண்களை வாயை நிறந்திரித்தும்
எனைப்போன் மணமலர் சூட்டுங்கொல் லோவிவ் விருஞ்சுனையே. ()

துணர்க்குழைப்பேதை மணக்குறிநோக்கி
யிணக்குறுதோழி புணர்ச்சியுரைத்தது.

இவை நான்கிற்கும் மெய்ப்பாடு—நகை. பயன்—கரவுநாடியுரைத்தல்.

5. மதியுடம்படுத்தல்.

ஒருமா விருபுள் வடிவாகக் கண்ட வுடம்பிடிக்கைப்
பெருமான் பழனியில் யானைக்கு மூக்கும் பெருங்கரமும்
வருமா சுணத்துக்குக் கண்ணுஞ் செவியும் வகுத்ததென்ன
விருமாண்பி னேந்தற்கு மேனழக்கு மாவியன் பின்பமொன்றே. ()

என்பொடுமியைந்த வன்புயிரிவர்க்கெனக்
கதிர்முலைப்பாங்கி மதியுடம்படுத்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—மதியுடம்படுத்தல்.

நடுங்கநாட்டம்.

மின்னே டுருமு மழைப்படர்ந் தாங்கெதிர் வேங்கைகிழித்
தன்னே வெறியவங் கோரடித் தப்பி யயில்பணித்தான்
பன்னே ருருத்திர ரேவாக மேவும் பழனிப்பிரான்
வன்னேன்மைநேமிப்புள் வாளால்வென் றென்னவொர்மன்னவனே.

கடுங்கொலைகூறி நடுங்கநாடியது.

மெய்ப்பாடு—நகை. பயன்—நடுங்கநாடக் கரவுநாடியுணர்தல்.

நாணநாடல் நடுங்கநாடல் முற்றும்.

---

௯. மடல்.

10. ஆற்று துரைத்த லுலகின்மேல் வைத்தல்
துணிவுரைத்தலோடுவகையுரைத்தல்
அருளா லரிதென னிடையா லரிதெனல்
அவயவ மெழுத வரிதென விலக்கல்
உடன்படாது விலக்க லுடன்பட்டு விலக்கல்
இடம்பட வொன்பதுஞ் செப்புங் காலை
வடம்படு முலைமேன் மடலா கும்மே.

1. ஆற்றுதுரைத்தல்.

ஆர்த்தாமஞ் சூடுஞ் சிவன்றவம் போல்வந் தமரர்சிறை
தீர்த்தார் பழனிப்பைந் தேன்மொழி யீர்சிறி தேகடைக்கண்
பார்த்தாற் குறுமுனிக் காசம னீயப் பயம்புவிக்கு
நீர்த்தாழ் கடலென்னல் போற்பெரி தாக்கொண்டு நின்றுய்வனே.

கடலெனப்பெருகுங் காதன்மீதூரற்
கடல்வடிவேலோ னாற்றுதுரைத்தது.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றுமையுணர்த்துதல்.

2. மடலேற் றுலகின்மேல்வைத்துய்த்துரைத்தல்.

அடலேறு வேலர் பழனியி லாயிழை யார்விரகக்
கடலேறு வார்க்கு மடலே புணையன்றிக் கண்டதுண்டோ
மிடலேறி யன்ன மிறங்காது வெண்மெய்யிற் பெண்ணைமரீஇ
மடலேறி வேதன் படைத்தானன் றேபல மாதரையே. (74.)

உலகின்மேல்வைத் தொளிர்வடிவேலோன்
மலர்முகப்பாங்கிமுன் மடலேற்றுரைத்தது.

3. துணிவுரைத்தல்.

திண்ணிய வெற்பிற் சிறைமீட்ட வேலர் சிவகிரியிற்
பண்ணிய நன்மையொர் பெண்ணு லெனக்குப் பரனுருப்போற்
புண்ணிய சாந்து மெருக்குந் தரிக்கப் புரிந்ததென்றால்
எண்ணிய வாறெய்தத் தாலமெல் லாம்வரு மென்வயமே. (75)

கடன்மானிலத்தோர் கடனெனத்தானும்
மடன்மாவேறும் வண்ணமுரைத்தது.

இவையிரண்டிற்கும் மெய்ப்பாடு—இளிவரல். பயன்—ஆற்றாமை யுணர்த்துதல்.

4. மடலேற்றுவகையுரைத்தல்.

வெறும்பகட் டென்றெண்ணல் வெண்ணகை யாயுங்கண் மென்கொடியை
யுறும்படிக் கோவ மடலேந்தி நாளை நும் மூர்புகுவேன்
நறும்பொருட் டந்தணன் றாழ்வோர் பழனியி னட்டுஞ்சங்கை
தெறும்படிப் பெய்தொலி நீர்காட்டு மின்னடிச் சேண்முகிலே. ()

நகையவன் றுணிந்து தான்மடலேறும்
வகையீதென்ன மாதர்க்கிசைத்தது.

மெய்ப்பாடும் பயனும் அது.

5. அருளாலரிதெனவிலக்கல்.

தெருட்பா வலர்க்கருள் செவ்வேள் பழனிச் சிவகிரியோய்
அருட்பா லுன் கண் ணுள்ள தாலே மறந்துமன் றிற்குலங்கள்
மருட்பா லடையப் பனைமடல் சாய்ப்பினும் மற்றதைநீ
பொருட்பா லறிஞ ரெழுதற் கலேகம் புரிகுவையே. (77)

வண்மையோய்நின் மனத்தருளுடைமையின்
உண்மைமடலேற் றுனக்கரிதென்றது.

6. நடையாலரிதெனவிலக்கல்.

விதிபத மாற்றிய செவ்வேள் பழனிமெல் லோதிமங்கள்
பதுமமும் வண்டு குமுதமு மேறிப் பயின்றனைய
சதிநடை மென்மொழி தீட்டும் படமுங்கள் சாலையுண்டோ
மதிகதி ரோனன்றிப் பச்சைவில் வீசிய வானென்னவே. (78)

அரிதினவயவம் பெரிதுநீயெழுதினும்
இருவகையவயவ மெழுதரிதென்றது.

7. அவயவமெழுதலரிதெனவிலக்கல்.

இளைதா முருகர்வை யாபுரி நாட விரண்டுபசுங்
கிளைமீதில் யாழு முவாமதி மேற்பிறைக் கீற்றுநன்மா
தளைபாதி பூவும் விதையுங் குழலிசைச் சங்கமுங்கொண்
டுளதா மொருகொம்பை நீவரைந் தான்மட லூர்குவையே. (79)

அவயவந்தீட்டற்கரிதெனக் குவிமுலைப்பாங்கிகூறியது.

மூன்றற்கும் மெய்ப்பாடு—நகை. பயன்—மடல்விலக்கல்.

8. உடன்படாதுவிலக்கல்.

மன்னு பொறுத்தி மடலேறன் மங்கைக்கு நான்வருட்டிச்
சொன்னாற்கண் போலிடந் தந்தா லுங்கொங்கைத் துணைகளைப்போல்
அன்னளென் சொற்கிடந் தாரா திருப்பினு மாங்கதன்மேல்
உன்னு னடப்பன செவ்வேள் பழனியி லோர்ந்தியற்றே. (80)

உடன்படாள்போன் றொளிர்வேலண்ணலை
மடந்தைதோழி மடல்விலக்கியது.

9. உடன்பட்டுவிலக்கல்.

கறைவேற்கண் ணாளென் கருத்தினள் யானவள் கண்ணினளெம்
இறைவேற் பிரான்பழ னிச்சிலம் பாவவ ளிந்துவென்றுற்
குறைவேற் பினுமன் னிலாவாவன் யான்கொன் னிலாமுக்கிநீ
நிறைவேற் றுமையில்லை யானிறை வேற்றுவ னின்னெண்ணமே. ()

அணங்கென்கருத்திற் கிணங்குவளென்னச்
சுணங்குறுமென்முலைத் தோழிசொல்லியது.

இவையிரண்டிற்கும் மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—தலைமகனை யாற்றுவித்தல்.

மடல் முற்றும்.

---

௧௦. குறைநயப்பு.

11\. குறிப் பறிதலொடு மென்மொழி கூறல்
விரவிக் கூற லறியாள் போறல்
வஞ்சித் துரைத்தல் புலந்துகூறல்
வன்மொழி கூறன் மனத்தொடு நேர்தல்
சொன்னவை யிருநாற் றுறைகுறை நயப்பென
மன்னிய பொருளின் வகுத்திசி னோரே.

1. குறிப்பறிதல்.

ஒருசொ லிருவ ரறியாமுக் கண்ணற் குணர்த்திணர்த்தார்
முருகர் பழனி முகிழ்நகை யாய்நம் முதிர்புனத்தே
வருவ ரொருவர் கிரகிய ராயு மவுனங்கொண்டார்
திரிவ ரயனிற் றிசைநான்கும் பார்ப்பரென் செய்குதுமே. (82)

கோங்கெழிற்கொங்கையைக் குறைநயப்பித்தற்குப்
பாங்கியுள்ளறிவான் பைப்பயமொழிந்தது.

2. மென்மொழியாற்கூறல்.

புனத்திள மான்....உசேர்ந்தோர் பழனிப் பொருப்பணங்கே
யினத்திரு வேளொ டொருவேளொப் பான்றழை யேந்திவெய்தே
வனத்துழ னீர்வண்டு போல்வனஞ் சூழ்வதென் வான்புதைத்த
கனத்திடை சேர்மதி போன்மதி சோர்வதென் காரணமே. (83)

மின்மெலிவேலோன் றன்மெலிவவட்குச்
சின்மொழிப்பாங்கி தெரியவுரைத்தது.

3. விரவிக்கூறல்.

தண்டமும் வேலுந் தரித்தோர் பழனித் தளிரியனீ
கண்டனை யாயிற்கண் ணப்பரொப் பாய்கழிக் கஞ்சந்துஞ்சுங்
கெண்டையைத் தேன்குட வாழைக் கனியெனக் கீண்டருத்திப்
பெண்டனைப் புல்கும் பிதாவைக்கண் டான்படும் பேதுறவே. (84)

அகத்தளவுவிரவி மிகுத்துரைத்தது.

இவை மூன்றிற்கும் மெய்ப்பாடு—இளிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன்—தலைமகளை மெலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தல்.

4. அறியாள்போறல்.

மாக்கடம் பான்மெய்ம் முருகால் வயந்தனை மன்னுவதால்
மேக்குய ருஞ்சந்தக் காவியப் பாடல் விரவுவதாற்
கோக்கந்த வாக னெனலாற் பழனிக் குமரரைப்போல்
நீக்கருந் தென்றல்செந் தூர்நின் றும் போதுவ நேரிழையே. (85)

அறிமடநூகச் செறிகுழன்மொழிந்தது.

மெய்ப்பாடு—மருட்கை. தோழிசொன்ன குறை யறியாள்போறலிற் பயன்—அறியாள்போறல்.

5. வஞ்சித்துரைத்தல்.

பண்டாய வோர்கதை கேட்டியெங் கோன்பழ னிக்குமரன்
தண்டா மரைப்பொய்கை வாய்த்தவஞ் செய்கின்ற தையலர்பால்

விண்டான் மறுமைக்கென் ருங்கவ ரவ்வண்ண மேவவும்பின்
கண்டா னெளிது மரிதுங்கொண் டாங்கவர் காதலையே. (86)

திருந்திழைமறுமொழி சேயோன்சேர்த்தி
மருந்தெனவிரும்ப வஞ்சித்துரைத்தது.

6. தோழி புலந்துகூறல்.

கண்ணடி யாவையுங் காட்டினுந் தன்னைக் கரப்பதுபோல்
உண்ணடி யானல துள்ளார்க் குரைப்ப துரைத்துநின்சூள்
எண்ணுடன் முற்றுதி செவ்வேள் பழனியை யெய்திலர்போ
னண்ணுவென் சொன்மறப் பாயிது வேண்டுவ னன்னுதலே. (87)

மறுமொழிதிருந்தப் பெறுகிலாத்தோழி
நலந்திகழ்மாதொடு புலந்துகூறியது.

7. வன்மொழியாற்கூறல்.

தென்னன்சங் கத்தமிழ்ச் சேயோர் பழனி தெளியப்பற்றும்
பொன்னங் கிழிதன்னி லுன்றிரு நாமமும் பூமடந்தாய்
தன்னங்கந் தன்னில் விபூதியுங் காட்டுஞ் சமயமொன்றோ
வென்னங்கொர் பாவிசொல் லாடான்வல் லான்மட லேறுதற்கே. ()

மடன்மாவேறுமென வன்மொழியதனாற்
கடனும்வண்ணங் கட்டுரைத்தது.

இவை மூன்றிற்கும் மெய்ப்பாடு—இளிவரவைச்சார்ந்த பெருமிதம். பயன்—வலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தல்.

8. மனத்தொடுநேர்தல்.

தாதைக்குப் பூணுந்தம் மாமற்குப் பாயுந் தவிர்த்திரைதேர்
கோதைக் கலாபர் பழனியுள் ளார்விள்ளுங் கோதறியேன்
பாதைக்கொர் மாலுமி போலுநெஞ் சேவெள்கப் பட்டுரையாத்
தீதைக் கடக்கவென் னேய் சொல்லை யேற்சொல்லு சேர்ந்தவர்க்கே. (89)

ஆயிடைவேலோ னாற்றுனென்னச்
சேயிழைமனத்துட் டேர்தலுற்றது.

மெய்ப்பாடு—அச்சம். ஆற்றுனெனக்கேட்டலிற் பயன்—குறை நேர்தல்.

துறைநயப்பு முற்றும்.

௧௧. சேட்படை.

12. தழைகொண்டு சேற றகாதென்று மறுத்தல்
நிலத்தின்மை கூற வினைவறி வுரைத்தல்
படைத்து மொழிதலொடு பனிமதி நுதலியை
யெடுத்துநா னுரைத்த விசையாமை கூறல்
செவ்வியில ளென்றல் சேட்பட நிறுத்தல்
அவ்வினிய மொழிநீ யவட்குரை யென்றல்
குலமுறை கிளத்தல் கோதண் டத்தொழில்
வலிசொல்லி மறுத்தன் மற்றவற் கிரங்கல்
சிறப்பின்மை கூறல் சிறியளென் றுரைத்தன்
மறைத்தமை கூறி நகைத்துரை செய்தல்
நகைகண்டு மகிழ்த னுனவ டன்னை
யறியே னென்ற லவயவங் கூறல்
கண்ணயந் துரைத்தல் கையுறை யெதிர்தன்
முகம்புக வுரைத்தன் முகங்கண்டு கூறல்
வருத்துரைத் தலொடு வண்டமை யவட்கு
மிகுத்துரை செய்து விரும்பிக் கொடுத்தல்
தழைவிருப் புரைத்த ருனிரு பத்தா
றிழைவளர் முலையா யிவைசேட் படையே.

1. தழைகொண்டுசேறல்.

இடும்பா சுரற்கருள் செவ்வேள் பழனியி னேந்திழைமீர்
கொடும்பா சுரமென் னுதைந்தானு மூசற்குக் கோதில்லைவேள்
விடும்பா சுரமன்ன வித்தழை வேண்டியிப் போதுகொண்டு
தடும்பாய் சுரமினித் தாங்கா தியானுஞ் சரணுமக்கே. (90)

வேந்தன்கையுறை யேந்திச்சென்றது.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றுமையுணர்த்துதல்.

2. தகாதென்றுமறுத்தல்.

வந்தற் சுடிகைப் பணுமணிப் பாம்பொரு யானைவைத்த
பூந்தொத் தரன்முடிக் கண்டைய மெய்திப் பொராநின்றபோற்
சேந்தக் கடவுள் பழனிவெற் பாமங்கை சிற்றிடைக்குட்
சாந்தத் தழைவரிற் கோபங்க டோன்றுமென் சார்பினர்க்கே. (91)

குறையைப்பித்தபின் கோல்வளைப்பாங்கி
யிறைவனைச்சேட்படுத் தேலாதென்றது.

3. நிலத்தின்மைகூறல்.

ஆற்றுப் படைகொண் முருகோர் பழனியி லாரமுறி
யேற்றுப் படுவிய ராகோங் கொடிச்சியர்க் கிற்பழியா
மேற்றுப் படக்கிய வேலோய் மருட்டொழில் வேழம்பர்க்குப்
பாற்றுப் படைவெட்டும் பின்னோர்க்கு வேதியர் பாங்குமின்றே. ()

தண்டழைநீதரக் கொண்டிலமென்றது.

4. நினைவறிவுரைத்தல்.

நிருத்தம் பயிலு மயிலூர் பிரான்பழ னிச்சிலம்பா
கருத்தன்பி னேந்திழை வாய்மலர் வேற்குக் கரும்பருத்தா
தொருத்தன்றன் கூவொலிக் குள்ளாய வோங்கலை யொத்திருந்தான்
மருத்தங்கு பூந்தழை காந்தள்கொண் டேந்த வருங்குவனே. (93)

பைந்தொடிகுறிப்பைப் பயின்றுகண்டல்லது
வந்துநின்கைத்தழை வாங்கேனென்றது.

5. படைத்துமொழியான்மறுத்தல்.

புயலைப் பழிப்பினுந் தாயைப் பிழைப்பினும் பூந்தழையைக்
கயலைப் பொருகண்ணி தள்ளாளென் றுலுங் கடவுளர்தம்
மயலைத் தணித்தவெள் வேலோர் பழனியல் லால்வதியாச்
செயலைக் கருகரு நீரோவென் பார்க்கென்ன செப்புவதே. (94)

அடுத்தடுத்துரவோ னருந்தழைகொணரப்
படைத்துமொழியாற் பாங்கிமறுத்தது.

6. பனிமதிநுதலியை யெடுத்துநாணுரைத்தல்.

தேங்குன்ற வாணர் மருகோர் பழனிச் செவிலியர்கைப்
பூங்கண்ணி சூழ்குழன் மேல்வண்டற் சோலை பொழிமலரை
யாங்கண்டு காட்டக்கல் லாக்குர வோர்க்கபி டேகித்தபோல்
வாங்குஞ் சிலையன்ன வாணுத னுணுதல் வாய்ந்திடுமே. (95)

மாணிழைப்பேதையை நாணெடுத்துரைத்தது.

7. இசையாமை கூறல்.

வீரம யேந்திர னுதியர் போற்றவை வேலெடுத்துச்
சூரம யேந்திரஞ் சாய்த்தோர்வை யாபுரித் தோன்றதெய்வத்
தாரமை யேந்திரள் வேங்கைமென் பூவொடு சாரங்கொள்ளாப்
பேரமை யேந்திரத் தாட்டவற் றேருதழைப் பேர்பெற்றுமே. (96)

நவைதவிர்குலத்துக் கிவைதகாதென்றது.

8. செவ்வியிலளென்றல்.

அம்பல கண்க ளரும்பல கொங்கை யறிந்திலள்வே
றும்பர் பிரான்மிசை யூர்ந்தோர் பழனியி லோர்ந்திலைநீ
வெம்பசி யால்வந்த பேர்க்குத வாவித்து னென்முலைபோற்
கொம்பனை யாளிருந் தாற்பின்னை யேதுன் குறைநயப்பே. (97)

கொவ்வைவாயினள் செவ்வியிலளென்றது.

இவை யேழிற்கும் மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன்—செவ்விபெறுதல்.

9. காப்புடைத்தென்றுமறுத்தல்.

நீதமி சேய்த்துநின் குன்றஞ்செவ் வேள்பழ னிச்சிலம்பா
கோதமன் போலெமர் கைச்சாபத் தாலும்பர் கோனெனினு
மேதமன் றேசெய்வ ரெம்மனை சீற்றத்த வீர்ங்கடல்வா
யாதவன் மாதவன் கைபுகு மாழியொத் தாழ்ந்தனனே. (98)

கடுங்காப்புடைத்தென நடுங்கமொழிந்தது.

மெய்ப்பாடும் பயனும் அது.

10. நீயே கூறென்றல்.

சுரையிழி கான்மரைப் பாற்பள்ளத் தூறிய தோரைபெடைக்
கிரையெனக் கிள்ளைகொண் டூட்டும்வெற் பாவிமை யாதமுக்கட்
பரைதரும் வேலர் பழனியன் னுண்மனப் பான்மையைநின்
னுரையெனும் விஞ்சையர் யாழ்கொண்டு நீசென் றுருக்குகவே. ()

ஆதகாதியான்சொல வஞ்சினன்வெற்ப
நீதகச்சென் றுரை நிரைவளைக்கென்றது.

மெய்ப்பாடும் பயனும் அது.

11. குலமுறைகூறி மறுத்தல்.

ஒருங்குங் குணத்தர்க் கெளியா ரொளிதிக ழும்பர்நிலத்
தருங்குஞ் சரமங்கை தோய்ந்தோர் பழனி யணிவரையாய்
கருங்குன் றி காவிக்குட் சங்கீன்ற முத்தைக் கடுக்குங்கொலாம்
பெருங்குன் றிருப்பினுஞ் சீறூரன் றேவெங்கள் பெண்கொடிக்கே.

உயர்குலத்துமமை யிழிகுலத்தியாங்கள்
மயர்வறக்கலத்தன் மரபலவென்றது.

மெய்ப்பாடும் பயனும் அது.

12. கோதண்டத்தொழில் வல்லிசொல்லி மறுத்தல்.

கொடியிடை வள்ளிக் கினியோர் பழனியெங் குன்றர்குன்றுச்
செடியுடற் காரென்னப் பெய்கணை சிம்புளக் கீண்டுவெற்பு
மிடிபடப் போமற் றிவர்கணை மாறன்செண் டென்னவும்வேள்
விடுசர மாகவு மோர்கலை பாய்ந்த வியப்பு நன்றே. (101)

மழைமதர்க்கண்ணி தழையெதிராது
சேட்படுத்தண்ணலைச் சின்னகைசெய்தது.

13. இரக்கத்தோடு மறுத்தல்.

கடகரி மான்முதல் வேட்டை விஞ்விக்கல் லாத்வர்போல்
அடகுகைக் கொண்டும் பொருள்கெடுத் தேனென் றரற்றுவரான்
மடநடை வான்மகட் சேர்ந்தோர் பழனியில் வாளியொன் றுந்
தொடுகில னென்றைவர்க் காத்தோனிற் றேன்றலுந் தோன்றிலரே.

இணங்கிக்கையுறை யெதிராதண்ணலை
யுணங்கினைபோலுமென் றுரையாடியது.

14. சிறப்பின்மைகூறல்.

ஆடற் கதிர்வடி வேலோய் பழனிநம் மையரையர்
கூடற்பொற் றுமரை மீனுமை கட்கஞ்சிப் போக்கொள்கைபோற்
றேடற் கரிதிங்கு மங்கைதன் கூந்தற்குஞ் செங்கைக்குந்தோற்
றோடிக் காந்த மலர்நீல மாந்தழை யோர்ந்திடிலே. (103)

செம்மலுன்கையுறைச் செறிதழைநீல
மிம்மலையெங்கணு மில்லையென்றது.

15. இளமைத்தன்மைகூறல்.

மரைப்பசுங் காய்வித் தொளிப்பே முலையும்வை யாபுரிவேள்
விரைப்பத மெண்ணில ரெண்முடி யாவித மேகுழலும்
நிரைப்பல கிள்ளை யிரைப்பே மொழியுமிந் நேரிழைக்கென்
னுரைப்பதை யாவரும் போசுரும் பார்க்குண வூட்டுவதே. (104)

இளையள்பேதை வினைவிலளென்றது.

இவை நான்கிற்கும் மெய்ப்பாடும் பயனும் அது.

16. மறைத்தமைகூறி நகைத்துரைசெய்தல்.

பண்கமழ் நன்முரு காற்றுப் படையர் பழனிவெற்பா
வெண்கன் முற் றுதென்னை நீமறைத் தாலுனக் கிற்புலிதான்

கண்கவிழ்த் தேபரு கும்பால் கிளியுந்தற் காப்பவர்க்கேட்
டுண்குமன் றேவிவ் விருதிறத் தியாதுன் னொழுக்கங்களே. (105)

என்னைமற்றைப்பிற் றுன்னரிதென்றது.

மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த நகை; இவள் நகுதலால் என்குறை இன்னதெனவுணர்ந்தனுான்று தானே முடிக்குமெனநினைந் தாற்றுவது பயன்.

17. நகைகண்டுமகிழ்தல்.

திகைத்தவர்க் கன்புசெய் செவ்வேள் பழனியிச் சேயிழைவாய்
நகைத்துணை யோடருட் பார்வைத் துணையு நமக்குண்டுவேள்
பகைத்திறம் வெல்லக் குலிசமும் வாளும்பின் பாவைமன்ற
லகத்தமர் பாலிகை யுஞ்சே லிணையுமி தாமென்னவே. (106)

பாங்கிநகைகண் டாங்கவன்மகிழ்ந்தது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—ஆற்றுமைநீங்குதல்.

18. நானவடன்னையறியேனென்றல்.

கடம்பார் பழனிச்செவ் வேள்கண்டி மாணிக்கக் கங்கைதன்னி
விடம்பாய் மணியொன்றை யென்னதென் பாரிலிங் கீட்டும்வண்டல்
வடம்பாய் முலையின ராயத்தில் யாரை மனங்கவர்ந்தா
யுடம்பா டுறுமண்ண லேயறி யேற்குண்மை யோதுகவே. (107)

மன்னன்மொழிந்த மாணிழைமடந்தையை
யந்நுண்மருங்கு லறியேனென்றது.

மெய்ப்பாடு—அழுகையைச்சார்ந்த பெருமிதம். நும்மாற் கருதப்படு வாளை யறியேனென்றுளாக என்குறை யின்னார்கண்ணதென வறிவித்தால் இவள் முடிக்குமென நினைந் தாற்றுவனுமென்பது பயன்.

19. அவயவங்கூறல்.

கருங்குழ லுங்கையுங் கண்ணுங் கழுத்துங் கனத்தவண்டே
யிருங்குழ கார்பொன் குடியொன்றி லேவைப் பிருகுடியே
யருங்குழ லேமொழி செவ்வேள் பழனி யணியிழைக்கு
மருங்குழலும்மெனைப்போலுமைப்போன்முலைவாய்த்தல்கொண்டே.

அவடனவயவ மிவையிவையென்றது.

20. கண்ணயந்துரைத்தல்.

கடல்விடஞ் சூழ்பவ ளக்கொடி போற்கறுத் துக்கடைசேந்
தடன்முத லொன்ப திரதமும் வாய்ந்தளி சேர்ந்தகைதை
மடலென நீண்டுவை யாபுரி வேள்வைகும் வான்பரங்குன்
றிடைவளர் பூஞ்சுனை மீன்போலு மங்கை யெழிற்கண்களே. (109)

துணைவிழிசெய்தொழிற் கிணைபலவுரைத்தது.

இவை யிரண்டிற்கும் மெய்ப்பாடு—உவகையைச்சார்ந்த பெருமிதம். பயன்—மறுத்தல்.

21. தழையெதிர்தல்.

அழுந்துஞ் சுருவுங்கண் டஞ்சார் நிதிகுறித் தாழியின்வாய்
விழுந்தும் பிழைத்தெனச் செவ்வேள் பழனிவெற் பாவிதியு
மெழுந்துன்ப முங்குறி யாதுன் னுதவியொன் றெண்ணியிம்மாங்
கொழுந்துங் குழற்குரித் தாயினன் யானெங் குலக்கொடிக்கே.

திருநுதற்பாங்கி பிரிவிடத்தாற்றுன்
பையுள் கண்டு கையுறையெதிர்ந்தது.

மெய்ப்பாடு—அச்சத்தைச்சார்ந்த பெருமிதம். பயன்—குறைநேர்தல்.

[தொடரும்.]

T. K. இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.

மதிப்புரை.

கரந்தைக்கட்டுரை:—அமுதினுமினிய தமிழ்மொழி தழைதற்குத் தாந்தாம் கருதியவாற்றான் ஆவனபுரியுங் கழகங்களுள், கரந்தைத் தமிழ்ச்சங்கமும் ஒன்று.

தமிழ்ப்பொழில் என்ற திங்கள் வெளியீட்டாலும், தமிழ்க்கல்லூரியாலும், பல தமிழ்நூல் வெளியீட்டாலும், சொற்பொழிவு முதலிய பிறதுறைகளாலும் இயன்றவரை தமிழை வளர்த்துவரும் இக்கழகம் இருபத்தைந்தாண்டு நிறைந்ததுகுறித்து இக்கழகத்தாரால் நிகழும் வெகுதானிய சித்திரைத்திங்கள் ௩, ௪, ௫-ஆம் நாட்களில் வெள்ளிவிழா மிகு சிறப்புறக் கொண்டாடப்பெற்றது.

இவ்வெள்ளிவிழாநன்னாள்வெளியீடாக, இக்கழகத்தார், பெரும்பேராசிரியரான திரு. வே. சாமிநாதையரவர்கள் முதலிய முப்பத்தொருபுலவர் எழுதிய முப்பத்தொரு கட்டுரைகளையும் தொகுத்துக் கரந்தைக்கட்டுரையென்னும் தலைப்பிட்டு, நல்ல தாளிற் சற்றேறத்தாழ ஐந்நூறுபக்க அளவில் அழகுறப்பதித்து வெளியிட்டிருக்கின்றார்கள்.

இக்கட்டுரையுள் இக்கரந்தைத் தமிழ்க்கழகத்தை நிறுவியவர் படிமக்கலமும் அதனை இஞ்ஞான்று வளர்த்துவரும் அறிஞருடைய படிமக்கலமும் இக்கழக விழாக்களில் தலைமைதாங்கினோரும் பிறவாறுதவியவரும் ஆகிய பெருந்தகையாளர் படிமக்கலமும் கழகவிழாவவைத்தலைவர் முதலியோர்க்கு அவ்வக்காலத்துப் படித்தளித்த வரவேற்புச்செய்யுண் முதலியனவும் சேர்க்கப்பட்டுள்ளன. இதனுள் காணப்படும் கட்டுரைகளைப்பற்றி எழுதப்புகின் மிக விரியும். தமிழ்மக்கள் இக்கட்டுரையைப்பெற்றுப் படித்துப் பயன் அடைந்து, இக்கழகம் மேலும் வளர்ந்து பொன்விழா முதலிய கொண்டாடப்பெற்று இத்தகைய பணிகளை நன்குநிறைவேற்றவும், ஏனைக்கழகங்களும் இவ்வாறு முயன்று தமிழைவளர்க்கவும் உதவுவார்களாக. இதன்விலை ரூபா மூன்று. வேண்டுவோர் தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்திற் பெறலாம்.

ஸ்ரீவில்லிபுத்தூர்த்தலபுராணம்:—வில்லிபுத்தூரென்பது பாண்டி நாட்டுத் திருமால் திருப்பதிகளுள் ஒன்று. இது, ஆழ்வார்களுள் பெரியாழ்வாரும் அவர் திருமகளாரான ஆண்டாளும் அவதரித்த பெருஞ்சிறப்புடையது.

இதன் மான்மியமனைத்தும் விளங்க வடமொழியில் ஸ்ரீவேத வியாசபகவான் அருளிச்செய்ததாக வழங்கும் புராணத்தை, யாவரும் படித்துப் பயன்கொள்ளுமாறு ஸ்ரீவில்லிபுத்தூர்க் கவிபூஷணம் ஸ்ரீ உ.ஸ. வே. நரசிம்மாச்சாரியர்ஸ்வாமி இயற்றியளித்த திரவிட மநோரஞ்சனி என்னும் உரையுடன், பெரியபெருமாள் ஆண்டாள் திருவரங்கமன்னனார் என்னும் இவர்களுடைய படிமக்கலன்களும் பெரியாழ்வார் ஜாதகமும் ஆண்டாள் ஜாதகமும் விஷயசூசிகையும் அமைய, ஆண்டாள்கோயில் தருமகர்த்தர்கள் அழகிய புத்தகமாக அச்சிட்டு வெளியிட்டிருப்பது நன்குமதிக்கத்தக்கது.

இதன்விலை ரூபா ஒன்று. வேண்டுவோர் இதன் உரையாசிரியரிடத்தும் ஆண்டாள்கோயில் தருமகர்த்தரிடத்தும் பெறலாம்.

இதனுள் அவதாரிகை என்ற பகுதியில் உரையாசிரியரால் விரித்துவிளக்கப்பட்டுள்ள புராணங்களின் அருமைபெருமை முதலிய எல்லாம் பெரிதும் போற்றிக்கொள்ளத்தக்கன.

இதன் உரையாசிரியரான கவிபூஷணம் ஸ்ரீ. உ.ஸ. வே. நரசிம்மாசாரியர்ஸ்வாமி தமிழ்ப்பெரும்புலவராய்ப் பல தமிழ்நூல்களை இயற்றியுபகரித்துவருவதுடன் வடமொழிப்புலமையுமுடையராய் இத்தகைய உரைவிசேடங்களையும் மொழிபெயர்ப்புக்களையும் இயற்றியுதவிவருவது பாராட்டத்தக்கது.

இருமொழிப்புலமையும் ஒருங்குடைய இப்பெரும்புலவரால் இயற்றப்பட்டுள்ள ஏனைநூல்களும் விரைவில் வெளிவந்துலகுக்குப் பயன்படுவனவாகுக.

ஈழகேசரி ஆண்டுமடல்:—ஈழநாட்டுத் தமிழ்ப்பத்திரிகைகளுள் ஈழகேசரி என்னும் வாரவெளியீடும் ஒன்று. திரு. நா. பொன்னையன் என்பாருடைய நன்முயற்சியால் வெளிவரும் இதன் வெகுதானிய ஆண்டுமடல் வரப்பெற்றோம்.

இதில் சுவாமி விபுலாநந்தர், திரு. சி. கணேசையரவர்கள் முதலிய புலவர் பலரும் பலவகைச்சுவையும் விரவ வரைந்த கட்டுரைகள் பலவும் இடையிடையே ஏற்ற சித்திரபத்திரங்களுடன் அழகுறப் பதிக்கப்பட்டுள்ளன.

இது மேலும் சிறந்து நாள்வெளியீடாகி நிலவுமாறு தமிழ் மக்கள் இதனை ஆதரிப்பார்களாக.

இதன் வருடச்சந்தா ரூபா ஐந்து. தனிப்பிரதி சதம் பத்து.

வேண்டுவோர் ஈழகேசரி அதிபர், சுன்னாகம், இலங்கை: என்ற விலாசத்திற் பெறலாம்.

ஸ்ரீஜகத்குரு ஸ்துதியும் திருவெண்காட்டு அகோரரந்தாதியும்:—இவை, திருநெல்வேலிக் குறுக்குத்துறைமடத்ததிபராயிருந்து பரிபூரணமடைந்த ஸ்ரீசங்கரகிங்கரசரணசேகரரான ஸ்ரீபரமஹம்ஸ சுவாமி சிவாநந்தசரஸ்வதியவர்களால் இயற்றப்பெற்றவை; சொற்பொருளணிநலம் வாய்ந்தவை. சுவாமி சிவாநந்த சரஸ்வதியவர்களுடைய அறிவு அருள் ஆற்றல் முதலிய பெருமையெல்லாம் அகோரரந்தாதியின் முகப்பிற் சேர்க்கப்பட்டுள்ள பாயிரச்செய்யுட்களால் விளங்கும்.

இவற்றை இரண்டாமுறை நல்லதாளில் திருத்தமாகப் பதித்துதவியவரும் சிவாநந்த சரஸ்வதியவர்களுடைய சிஷ்யையுமான லெ. பருவதத்தம்மாள் அவர்களுடைய குருபக்தியும் தமிழ்ப்பற்றும் பாராட்டற்பாலன.

இவ்விரண்டும் அடங்கிய புத்தகத்தின் விலை அணா ஆறு.

வேண்டுவோர் லெ. பருவதத்தம்மாள், குறுக்குத்துறைமடம், திருநெல்வேலி என்ற விலாசத்திற் பெறலாம்.

தில்லைக் கற்பகவிநாயகர்சதகமும் கற்பகவிநாயகர் தோத்திரம் எழுபதும்:—இவை, தேவிகோட்டைத் திருவாளர் வே. ஆ. தி. மா. சிதம்பரஞ்செட்டியாரவர்களால் இயற்றப்பெற்றவை. இவற்றுள் சதகச்செய்யுள்களில் விநாயகபுராணக் கதைகள் சுருக்கியமைக்கப்பட்டுள்ளன. சதகமும் தோத்திரமும் ஆகிய இவற்றின் பொருள்

இனிதுவிளங்குமாறு சில செய்யுட்களுக்கு விரிவுரையும், சிலவற்றுக்கு அரும்பதவுரையும், மேற்கோளும் விஷயவிவரணமும் ஒவ்வொருபக்கத்திலும் கீழ்க்குறிப்பாக அவ்வச்செய்யுளின் இலக்கமிட்டு எழுதிச்சேர்த்து ஒரே புத்தகமாக அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. இவற்றை இயற்றிய செட்டியாரவர்களுடைய தமிழ்ப்பணி நன்குமதிக்கத்தக்கது. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

மலர்வணக்கம்:—இது, இராம. சேகநாதன் என்பவரால் இயற்றப்பெற்றது. நிலைமண்டில ஆசிரியப்பாக்களால், முறையே விநாயகர் கலைமகள் முருகப்பிரான் சிவபெருமான் உமாதேவியார் திருமால் திருமகள் எனும் கடவுளரை மலர்தூவி வழிபடுமாறியற்றப்பட்ட பிள்ளையார் மலர்வணக்கம், கலைமகள் மலர்வணக்கம், முருகப்பெருமான் மலர்வணக்கம், சிவபெருமான் மலர்வணக்கம், உமையம்மையார் மலர்வணக்கம், திருமால் மலர்வணக்கம், திருமகள் மலர் வணக்கம் எனும் எழு பகுதிகளையுடையது. பெரிய எழுத்தில் பிழையறப் பதிக்கப்பெற்றது.

தமிழ்மக்கள் கடவுள்வழிபாடுகளில் வடமொழிச் சுலோகங்களையும் அருச்சனைநாமாவளியையுமே பெரும்பாலும் சொல்லி வழிபட்டுவரும்முறையில் அவற்றின் பொருள் அறியாது பிழைபடவும் உச்சரித்துவருவதுகண்டு, அக்கடவுளர்க்குச் செய்யும் அருச்சனை வழிபாடுகட்குரிய மந்திரங்களைத் தமிழ்மொழியிலே கடைப்பிடித்தொழுகிற் பெரும்பாலும் மேற்கூறிய பிழைபாடு நேர இடமிராதென்று கருதி இந்நூலாசிரியர் இதனை வெளியிட்டுள்ளார்.

இதன் விலைவிவர முதலியன தெரியவிரும்புவோர் 'இராம. சேகநாதன், சூடமங்கை, மியாங்மியா ஜில்லா' என்ற விலாசத்துக்கு எழுதி அறியலாம்.

பதிற்றுப்பத்து வசனம்:—எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய பதிற்றுப்பத்து, புலவர்பெருமக்கள் பதின்மரால் சேரவரசர் பதின்மர்மீ தியற்றப்பட்டது. மிகவும் பழமைசான்றது. தமிழ் நூல்களுட் டலையாயது. இதற்குப் பழைய உரையொன்றுண்டு;

எனினும் இதன் உள்ளுறைபொருள்பலவும் அவ்வுரையால் இனிதுவிளங்காமையால் இந்நூல்பயில்வாரடையும் இடர்ப்பாடு கண்டு அவர்கட்குதவுமாறு தாம் அறிந்தவாற்றான் இந்நூற் செய்யுட்களையெல்லாம் வசன உருவாக்கி ஆராய்ச்சியுரையுடன் அச்சிட்டு வெளியிட்ட யாழ்ப்பாணத்து நவாலியூர் திரு. ந. சி. கந்தையாபிள்ளையவர்களுடைய நன்முயற்சி பாராட்டத்தக்கது.

இதன் விலை ரூபா ஒன்று. வேண்டுவோர் ஆக்கியோர்க் கெழுதிப் பெறலாம்.

பழனிமாம்பழக்கவிச்சிங்கநாவலர்சரிதை:—இது, ஒட்டக்கூத்தர், புகழேந்தியார் பொய்யாமொழியார் வில்லிபுத்தூரார், அருணகிரிநாதர், படிக்காசுத்தம்பிரான், இரட்டையர் முதலிய புலவர்பெருமக்கள் வரலாறுகளை வெளியிட்டவரான திருவாளர். சி. கு. நாராயணசாமிமுதலியாரவர்களால், நம் செந்தமிழ்ப்பகுதிகளில் அவ்வப்போது வெளியிடப்பட்டவற்றையெல்லாம் தொகுத்தும் மேலும் வேண்டுவன கூட்டியும் குறைத்தும் தனிப் புத்தகமாக அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மாம்பழக்கவிச்சிங்கநாவலரவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் விளங்கிய பெரும்புலவர்களுள் மிகவும் பிரசித்திவாய்ந்தவர். பலவகைக் கவிகளையும் விரைவில் அழகும் இனிமையும் மிக இயற்றும் ஆற்றலுடையவர். பல்பல பெருஞ்செல்வர்களாலும் அரசர்களாலும் நன்குமதிக்கப்பெற்றவர்.

இவருடைய வரலாறுகளை யாவரும் படித்தின்புறும்படி செவ்விய தமிழ்நடையில் எழுதியுதவிய முதலியாரவர்களுடைய நன்முயற்சி பாராட்டத்தக்கது.

தமிழ்மக்கள் இதனைப் பெற்றுப் படித்து மகிழ்ந்து, முதலியாரவர்கள் மேலும் இத்துறையின் முயன்று பல புலவர்வரலாறுகளை எழுதிவெளியிட ஊக்கமூட்டுவார்களாக.

இதன்விலை அணா—8. வேண்டுவோர்: 'சி. என் தக்ஷிணாமூர்த்திமுதலியாரவர்கள், கலைமகள் தமிழகம், நெ. 147, தாமஸ் வீதி, கோயம்புத்தூர்' என்ற விலாசத்திற் பெறலாம்.

பழனித்தல மகத்துவம்:—இதுவும், திரு. சி. கு. நாராயணசாமி முதலியாரவர்களால் எழுதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. பழனித் தலவிஷயமாய் அறியவேண்டிய செய்திகளையெல்லாம் இருபத்திரண்டுதலைப்பின்கீழ் இருபத்தொரு சித்திரபத்திரங்களால் ஆராய்ச்சிமுறையில் விளக்குவது. தலவரலாறறிய விரும்புமவர்க்கும் தலயாத்திரைசெய்யுமவர்க்கும் பயன்படத் தக்கது. இதன்விலை அணா 12. வேண்டுவோர் மேற்குறித்த தக்ஷிணாமூர்த்திமுதலியாரவர்களிடம் பெறலாம்.

1938ஹு ஜூலைமீ 7உ (வேகுதானியஹு ஆனிமீ 23உ) காலை $8\frac{1}{2}$ மணிக்குக்கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

---

1. மகா-ா-ா-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L. M.L.C.
—உப-அக்கிராசனாதிபதி.
2. ,, V. S. இராமஸ்வாமி சாஸ்திரியவர்கள் B.A., B.L.
3. ,, V. சுந்தரமையரவர்கள் B.A., B.L.
4. ,, N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. (விஷயம்-1) 1938-ஆம்ஹு ஜூன்மீ முடிய உள்ள சங்கமாபீசு வரவுசெலவுகணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II. (விஷயம்-5) மாட்சிமைதங்கிய சிவகங்கையரசரவர்களுக்குச் சங்கத்தினின்றும் இனாமாக அளித்துள்ள சங்கப்பிரசுரங்களின் விலையைச் செலவெழுதிவிட (write off செய்ய)ச் சங்கநிர்வாகசபையாரின் அங்கீகாரம் வேண்டுமென்று கௌரவகாரியதரிசிகள் எழுதிய மெமோவில் கண்டபடி செய்ய அநுமதிக்கலாயிற்று.

III. (விஷயம்-8) சங்கசிப்பந்திகளாகிய (1) பண்டித ஹரிஹரையர், (2) T. K. இராமாநுஜையங்கார், (3) வித்வான் பண்டித R. வீரராகவையங்கார், (4) லைப்ரேரியன் A. நாராயணையர்: இந்நால்வர்களின் ரஜாமனுக்கள் சம்பந்தமாகக் கௌரவகாரியதரிசிகள் எழுதிய மெமோ படிக்கப்பெற்றது. முதல் மூன்று நபர்களுக்கும் அவர்கள் ரஜாவிலிருந்தகாலத்துக்குப்

பாதிச்சம்பளம் தரலாமென்றும், சான்காவதுகப்ருக்கு ரஜாவிலிருந்த 5 நாட்களுக்கும் பிடிக்கப்பட்டுள்ள சம்பளத்தை மெமோவில் கண்டபிரகாரம் கொடுத்துவிடலாமென்றும் சிபார்சுசெய்து எழுதிய கௌரவகாரியதரிசிகளின் மெமோ அங்கீகாரம் செய்யலாயிற்று.

As it is learnt now that the President may be coming to town the meeting is adjourned to the afternoon for the consideration of the rest of the agenda.

T. C. Srinivasan,
Vice President,
7—7—'38.

It is possible for the President to come to Madura tomorrow. The meeting is adjourned to tomorrow.

T. C. Srinivasan,
Vice President,
(5 p.m.) 7—7—'38.

1938-ஆம் ஜூலைமீ 8௳
(5-15 p m)

1. மகா-ா-ா-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A.B.L., M.L.C.
—உப-அக்கிராசனாதிபதி.

2. ,, V. S. இராமஸ்வாமி சாஸ்திரியவர்கள் B.A., B.L.

3. ,, V. சுந்தரமையரவர்கள் B.A., B.L.

4. ,, N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.
இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. (விஷயம்-2) (a) மதுரை M. R. C. C. Bank-ல் வட்டிக்குக் கொடுத்துள்ள Fixed Deposit தொகை ரூ 25011-5-0-யும் மூன்றுவருஷங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ 100க்கு 3வட்டிக்குப் புதுப்பித்திருப்பதையும், மதுரை இந்தியன்பாங்கில் வட்டிக்குக் கொடுத்துள்ள Fixed Deposit தொகை ரூ 5000த்தையும் ஒருவருஷத்துக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ 100-க்கு 2½வட்டிக்குப் புதுப்பித்திருப்பதையும் அங்கிகரிக்கலாயிற்று.

(b) மதுரை இந்தியன்பாங்கில், வட்டிக்குக்கொடுத்துக் காலவரையறை கடந்த Fixed Deposit தொகை ரூ 10000, மற்ரெரு Fixed Deposit தொகை ரூ 10000 ஆக இவ்விரண்டு டெபாஸிட்டுகளையும் ஒவ்வொன்றையும் ஒருவருஷத்துக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ 100க்கு 2½ வட்டிக்குப் புதுப்பிக்கலாமென்றும், மதுரை M. R. C. C. Bank-ல்Fixed Deposit-ல் வட்டிக்குக்கொடுத்துள்ள (1) ரூ. 1050 (2) ரூ. 1001 ஆக இவ்விரண்டு டெபாஸிட்டுகளின் வாயிதாமுடிவடைகிற தேதிமுதல் ஒவ்வொன்றையும் மூன்றுவருஷங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ 100-க்கு 3-வட்டிக்குப் புதுப்பிக்கலாமென்றும் தீர்மானிக்கலாயிற்று.

II. (விஷயம்-3) 1938—1939-ஆம் வருஷத்துக்குத் தயாரிக்கப்பெற்ற சங்கம் வரவுசெலவுமதிப்புத் திட்டம் (Budget) அதற்கு முந்தின வருஷத்திய Actuals உடன் அங்கீகரிக்கலாயிற்று.

III. (விஷயம்-4) சங்கத்தின் வருஷாந்தக்கணக்குகளைப் பரிசோதனை செய்யவேண்டுமென்று மதுரை ஹைக்கோர்ட்டுவக்கில் மகா-ா-ஸ்ரீ R. சேஷையங்கார் B.A., B.L. அவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

IV (விஷயம்-6.) தேவகோட்டை மகா-ா-ா-ஸ்ரீ தி. சு. பள. ப. சிதம்பரம் செட்டியாரவர்கள் சங்கத்துக்கு ரூ 500 நன்கொடை அளித்திருப்பதற்கு இச்சங்கத்தார் நன்றிபாராட்டி ரிக்கார்டில் பதிவுசெய்தார்கள். சங்கத்தாரின் வந்தனத்தை அவருக்குத் தெரிவிக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

V (விஷயம்-7.) திருவநந்தபுரம் ரிட்டயர்டு ஹைக்கோர்ட்டு ஜட்ஜாம் புகழ்பெற்றவரும் பிரசித்திபெற்ற வித்வானும் ராஜதந்திரப் பிரவீணருமான மகா-ா-ா-ஸ்ரீ K. G. சேஷையரவர்கள் காலஞ்சென்றதனுல் தமிழ்மக்களுக்கு நேர்ந்த பெருநஷ்டத்தையும் அநுதாபத்தையும் இச்சங்கத்தார் ரிக்கார்டில் பதிவுசெய்தார்கள்.

VI. (விஷயம்-9.) Other Subjects.

(1) இப்பொழுதுள்ள சங்கநிர்வாகசபை அங்கத்தினர்களின் காலவரையறை முடிவான தேதிமுதல் சங்கமஹாசபையாரின் அடுத்த கூட்டம் வரையிலும் இப்பொழுதுள்ள அங்கத்தினர்களே மறுபடியும் நிர்வாகசபை அங்கத்தினராக நியமிக்கப்பெற்றிருக்கிறார்கள்.

(2) சங்கத்தின் பொருணிலைமை முதலியவற்றைப்பற்றிக் கௌரவ காரியதரிசிகள் எழுதிய ரிப்போர்ட்டு அடுத்தமீட்டிங்குக்குத் தள்ளிவைக்க லாயிற்று.

(3) மாட்சிமைதங்கிய கனம் அக்கிராசனாதிபதியவர்களைக் கலந்து அவர்கள் உத்தரவின்பேரில் சங்கத்தின் வருஷோத்ஸவம் நடத்துவதற்குக் கௌரவகாரியதரிசிகள் ஏற்பாடுசெய்யவேண்டுமென்று தீர்மானிக்கலாயிற்று.

T. C. ஸ்ரீநிவாஸையங்கார்,
உப-அக்கிராசனாதிபதி.

மதுரைத்தமிழ்ச்சங்கம், 8—7—'38.

அநுதாபக்குறிப்பு.

திருவநந்தபுரம் ஹைக்கோர்ட்டுஜட்ஜாயிருந்த கே. ஜி. சேஷையரவர்கள் நிகழும் வெகுதானியஹூ ஆனிமீ 12௨ (26-6-38) ஞாயிற்றுக்கிழமை காலஞ்சென்றது தெரிந்து மிகவும் வருந்துகிறோம்.

இவர் ஆங்கில அறிவாற்சிறந்துவிளங்கியதேயன்றித் தமிழிலும் சிறந்த அறிவும் ஆர்வமும் உடையராய்த் திகழ்ந்தவர். இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தினிடத்துப் பேரன்புடையவர். செந்தமிழ்க்குப் பல பொருளுரைகளை உதவியவர். மதுரைத்தமிழ்ச் சங்கத்தின் 17-ஆம் ஆண்டுவிழாவின் அவைத் தலைவராயிருந்து அதைச் சிறப்புறச்செய்ததுடன் பல ஆண்டு சங்கப்பரீக்ஷகராகவுமிருந்து உதவியவர். சரித்திர ஆராய்ச்சியிலும் வல்லுநர். இவருடைய சரித்திர ஆராய்ச்சித்திறமை இவர் எழுதிய 'சேர அரசர்கள்' என்னும் புத்தக முதலியவற்றால் விளங்கும். அருங்கலைவிநோதராகிய இவரைப் பிரிந்து வருந்தும் சுற்றத்தார்க்கும் நண்பினர்க்கும் நமது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பத்திராசிரியர்.

திருவநந்தபுரம் ஹைக்கோர்ட்டு ஜட்ஜாயிருந்த கே. ஜீ. சேஷையரவர்கள்

71-வது வயதில் (26-6-38ல்) காலஞ்சென்றது குறித்து

ஸ்ரீவானமாமலைமடம் ஆஸ்தானவித்வான் அபிநவகாளமேகம்

தென்திருப்பேரை

ஸ்ரீ அனந்த கிருஷ்ணையங்காரவர்கள் இயற்றிய

இரங்கற்பா.

ஆசிரிய விருத்தம்.

அந்தணர் குலப்பரவை யிந்துவென வேயுதித்
தளவில்கலை மன்னுகுணவான்
ஆரண முழக்கமுறு கேரளத் திற்பல
ஆண்டாண்ட மூலநிருபன்

சிந்தைமகி ழுயர்தர்ம நீதிபதி யானவன்
சேடனெனு நாமதேயன்
செகதலத் தெங்கணும் பெரியசங் கங்களிற்
சீர்த்தலைமை பூண்டதிறலோன்

சந்தமிகு யான்செய்பிர பந்தங்க ளாராய்ந்து
தகுமதிப் புரையளித்தோன்
சாமிநா தப்பெயர்கொள் கும்பமுனி யாதியோர்
சாற்றிடும் சகலபாக்யன்

விந்தைபெறு வெகுதான்ய மிதுனரவி நிலவின்றி
மேவுதிதி பதினைன்கிரா
மெய்விடான் மெய்விட்ட செய்தியுண ரறிஞரும்
விசனமே னடையாரரோ.

அச்சத்தினல் எதில் வீசுகிறதில்லையோ, எதிலிருக்கிற கொழுந்துகளையும் மரக்கன்றுகளையும் எவரும் கைகளால் தொடுவதில்லையோ, இந்திரன் பகைவரான அரசருடைய அந்த அசோகவனம் அழிக்கப்பட்டது என்று அவரிடம் அறிவிப்பாயாக.

பிரதிஹாரி:—ஐய! நாள்தோறும் தலைவருடைய அடித்தொண்டு செய்பவளான எனக்கும் இதற்குமுன் காணப்படாத பரபரப்பு என்?

சங்கு:—ஓ! காரியம் முந்திவிட்டது; விரைந்து அறிவிப்பாயாக, அறிவிப்பாயாக.

பிரதிஹாரி:—ஐய! தெரிவிக்கிறேன். (செல்லுதல்.)

சங்கு:—[முன்னேபார்த்து] ஓ! இலங்கேசுவரர்,

ஊஜ்ஜ்வலஜ்ஜ்வல ஹஸ்தோஹதநேத்ர:
கநகம்யோஜ்வலதீபகை ஸமேத:।
த்வரிதமபிவர்த்தமாநோ ஸமேதோ
யுகவிநாசஸமுத்யதோ யதார்க:॥

அழுக்கற்ற அரவிந்தம்போன்ற உக்கிரமான கண்களுடையவராயும் பொன்மயமான ஒளியினையுடைய விளக்குகளைத் தாங்குபவர்களால் முன்சென்று அழைத்துச்செல்லப்பட்டவராயும் உக முடிவில் உதிக்கும் பிரளயகால சூரியன்போல், கடுஞ்சினமுடையவராயும் இங்கேயே வருகிறாரே!

இராவணன்:—[மேற்கூறியவாறு அரங்கமேறி]

கயம் கயம் ஹோ நவவாக்யவாதிநு
ஸ்ருணோதி ஸீ ஷம் வத கேந வாஸ்ய।
ஸமஸ்திஷ்டேனா ஸம்த்தஹயேந ம்ருஷ்டம்
வநாபிஷேகஸ் வரியஷ்டேதாஹஹ॥

ஓ! எப்படி! எப்படி! புதிய புதிய வாக்கியங்களை உரைப்போனே! சாகப்போகிறவனும், பயமில்லாதவனுமான எவனல்

(இறுமாப்புடன்) என் வனம் அழிக்கப்பட்டு நானும் அவமதிக்கப் பட்டேன்? விரைந்து உரைப்பாயாக.

சங்கு:—(நெருங்கிவந்து) மகாராஜர் வாழவேண்டும். மறைவாய் வந்த ஒரு வானரனுல் பரபரப்புடன் அசோகவனம் அழிக்கப்பட்டது.

இராவணன்:—(அவமதிப்புடன்) வானரனுலா? சென்று விரைவில் அவனைப் பிணித்துக்கொணர்வாயாக.

சங்கு:—மகாராஜர் உத்திரவுப்படி. (செல்லுதல்)

இராவணன்:—இருக்கட்டும், இருக்கட்டும்.

யுதி⁴ஜக³த்த்ரயபீ⁴திக்ருதோபி மே
ப்ரதிக்ருதம் த்ரித³ஶைர்யதி³ விப்ரியம்।
ஸநுப⁴வத்வவிரதாம்ருதாஶிந:
ப²லமிதோ நிஜஶார்யஸமுத்³ப⁴வம்॥

போரில் மூன்றுலகத்துக்கும் அச்சம் விளைவிப்பவனை எனக்குத் தேவர்கள் தீங்குசெய்வார்களானுல் தங்களுடைய தீய செயலால் நிகழ்ந்தபலனை அவர்கள் (அமுதத்தைப் பருகியதால்) சாகாமலிருந்தே அனுபவிக்கட்டும்.

சங்கு:—(அரங்கிற்புகுந்து) மகாராஜர் மேன்மையுடன் வாழ்க. அந்த வானரன் மிக்க வலிமைவாய்ந்தவன்; அவனுல் பெரியமரங்களும் தாமரைத்தண்டுபோல் இலகுவாய்ப் பிடுங்கி எறியப்பட்டன; மரத்தாலாகிய மலையும் கைக்குத்தினுல் தகர்க்கப் பட்டது; லதாகிருகங்கள் கைத்தலங்களால் நசுக்கப்பட்டன; தோட்டக்காவற்காரர்கள் அவனுடைய பேரொலியால் மயக்க மடைந்தார்கள்; அவனைப் பிணித்துவரத் தகுந்த படையை அனுப்ப மகாராஜர் உத்திரவிடவேண்டும்.

இராவணன்:—ஆதலால் வானரனைப் பிணித்துவர, ஆயிரம் ஆட்கள் கொண்டதான சேனையை அனுப்ப உத்திரவிடுவாயாக.

சங்கு:—மகாராஜாவின் கட்டளைப்படி. (வெளியேசென்று மறுபடி அரங்கிற் புகுந்து) மகாராஜர் மேன்மையுடன் வாழ்க.

ஸ்வீயைரேவ மஹாவ்ருக்ஷைஸ் ஸ்வீயா மஹாபலா:।
க்ஷிப்ரமேவ ஹதா ஹ்யேந கிங்கராஸ் த்ருமயோதிநா॥

மரங்களையே ஆயுதமாகக்கொண்ட அந்த வானரனால், நம்முடைய விருக்ஷங்களைக் கொண்டே நம்முடைய ஆட்கள் மிகுவிரைவில் மாய்க்கப்பட்டார்கள்.

இராவணன்:—மாய்க்கப்பட்டார்களா? ஆதலால் வானரனைப் பிடித்துவரும்படி குமாரன் அக்ஷனுக்கு ஆணையிடுவாயாக.

சங்கு:—மகாராஜரின் ஆணைப்படி. (வெளியே செல்லல்)

இராவணன்:—

வநேசரோ ஹி க்ருதாஸ்த்ரஶ்ச ஶூரஶ்ச பலவாநபி।
ப்ரஸஹ்ய வா நிக்ருஹ்ணீயாத் ஹந்யாத்வா தம் வநௌகஸம்॥

காட்டில் வசிப்பவனான அந்த வானரனை அஸ்திரப்பயிற்சியுள்ளவனும், சூரனும், வலிமிக்கவனுமான குமாரன் வலிந்துபற்றியாவது வருவான்; அல்லது அவனை எளிதிற் கொல்லுவான்.

சங்கு:—(அரங்கிற் புகுந்து) வேறொரு சேனையை அனுப்ப வேண்டும்.

இராவணன்:—எதற்காக?

சங்கு:—மகாராஜர் கேட்கவேண்டும். வானரனை நோக்கிக் குமாரன் செல்வதைக்கண்டு, மகாராஜரின் உத்திரவில்லாமலே ஐந்து சேனாதிபதிகள் தாங்களாகவே உடன்சென்றார்கள்.

இராவணன்:—பிறகு?

சங்கு:—பிறகு எதிர்த்துவருகிற அவர்களைப் பார்த்துச் சற்று அஞ்சினவன்போல், அந்த வானரன் தோரணத்தைப்பிடித்துக்

கொண்டு தங்கக்கோலால் ஐந்து சேனைத்தலைவர்களையும் கீழே வீழ்த்தினான்.

இராவணன்:—பிறகு? பிறகு?

சங்கு:—

க்ரோதாத் ஸம்ரக்தநேத்ரம் த்வரிததரஹயம்
ஸ்யந்தனம் வாஹயந்தம்
ப்ராவ்ருட்காலாம்புதாபம் ஶரநிகரவர்ஷந்தம்
பாணஜாலானி ஸந்தம்।
தாந் பாணாந் நிர்தூய த்வந்த்வ கபிரபி ஸஹஸா
தச்சூரம் ஸம்ப்ரமய்ய
கண்டே ஸங்க்ருஹ்ய ப்ருஷ்டம் ஸ்மிததரஸ்மிதவோ
முஷ்டினா ஸஞ்ஜகான ॥

சினத்தால் சிவந்தகண்களுடன், விரைந்துசெல்லக்கூடிய புரவிகள் கட்டின இரதத்தை ஓட்டிக்கொண்டும், கார் காலத்து மேகம்போல் அம்புகளைப் பொழிந்துகொண்டும் (அக்ஷ குமாரன்) எதிரே வரும்போது, மேனியில்விழுந்த அம்புகளைக் கீழே உதிர்த்துவிட்டு, அந்தக் குரங்கு இரதத்தைத் தாண்டித் தைர்யசாலியான குமாரனைக் கழுத்தில்பிடித்துச் சிரித்த முகத் துடன் கைக்குத்தாலேயே மாய்த்துவிட்டது.

இராவணன்:—(கோபத்துடன்) ஆ! கொன்றுவிட்டதா?

திஷ்ட த்வமிஹைவ நீசாஸ்த்ர கபிகீடகம்।
பஶ்ய ஹஸ்தாக்ரோஷ்யக்ரோதானலமிஹைவ க்ஷணாத் ॥

நீ நிற்பாயாக; நானே அந்தக் குரங்காகிய புழுவை அணுகி அதை நொடிப்பொழுதில் கோபத்தீப்பொறிகளால் நீறுக்குகிறேன்.

சங்கு:—மகாராஜா அருள்புரியவேண்டும்; அக்ஷகுமாரன் கொல்லப்பட்டான் என்பதைக்கேட்டு மிகவும் சினங்கொண்ட மனத்துடன் அந்தக் குரங்கை எதிர்க்கக் குமாரர் இந்திரஜித்தே சென்றிருக்கிறார்.

இராவணன்:—ஆகையால் நீ அங்கே சென்று செய்தியைத் தெரிந்துவா.

சங்கு:—மஹாராஜரின் உத்திரவின்படி. (வெளியே செல்லுதல்.)

இராவணன்:—அக்ஷகுமாரனும் அஸ்திரப்பயிற்சியுள்ளவனே!

அவஶ்யம் பாவி வீராணாம் வதோ வா விஜயோऽதவா।
ததாபி க்ஷாத்ரகஶ்ரேஷ்டம் ஹ்ருதீஷ்டநே நாஜ்ஞா:॥

போரில் வீரர்களுக்கு வீழ்தல் அல்லது வெற்றி நிகழ்வது திண்ணம். அப்படியிருந்தும் எனக்குச் சற்று மனக்கலக்கம் உண்டானது இகழத்தக்கதே!

சங்கு:—(அரங்கிற்புகுந்து) மகாராஜர் வென்றிபெறுக; இலங்கையரசர் வெற்றியடைக; அழகியதிருமுகமுடைய அண்ணல் வாழ்க.

ஸம்வ்ருத்தம் தாத்ருஶம் யுத்தம் குமாரஸ்ய ச தஸ்ய ச।
ததஸ் ஸ வாநர: ஶீக்ரம் பத்த: பாஶேந ஸாம்ப்ரதம்॥

குமாரர் இந்திரஜித்துக்கும் அவனுக்கும் கடும்போர் நிகழ்ந்தது; அவரால் அந்த வானரன் கயிற்றினல் கட்டப்பட்டான்.

இராவணன்:—இந்திரஜித்தால் ஒரு குரங்கு கட்டப்பட்டதென்பதில் என்ன ஆச்சரியம்!

ஒரு அரக்கன்:-(அரங்கிற்புகுந்து) மகாராஜர் வெல்க.

இராவணன்:—விபீஷணனை அழைத்துவா.

அரக்கன்:—உத்திரவு. (வெளியே செல்லல்)

இராவணன்:—நீயும் அந்தக் குரங்கைக் கொண்டுவா.

சங்குகர்ணன்:—ஆணைப்படி; (வெளியேசெல்லல்)

இராவணன்:—(கவலையில் ஆழ்ந்து) ஹா! கஷ்டம்.

அவிஜ்ஞா ப்ரநஷ்டா லங்கா ஸஹிதைஸ் ஸாக்ஷாந்நகை:।
அஹிம்ஸ்ய தஶக்ரீவம் ப்ரவிஷ்ட: கிம் வாநர:॥

தேவர்களும் அசுரர்களும் ஒன்றுகூடினும், இலங்கையென்பது அவர்களால் மனத்தாற்கூட நினைக்கவொண்ணாததே! அவ்விதமிருந்தும், தசக்கிரீவனை மதியாமல் ஒரு வானரன் அதில் நுழைந்துவிட்டானே! மேலும்,

ஜித்வா த்ரைலோக்யமோஜஸ ஸஸுரதநுஜ ஸம்ஸ்தம்
யஜ்ஞயா ரவி-ஸேதந
க்ராந்த்வா கைலாஸாதீஶம் ஸ்வகணபரிவ்ருதம்
ஸாகமாகம்ப்ய தேவ்யா।

ஜ்யா தஸ்யாஸ் ப்ரஸாதம் ப்ரநாமஸ்தயா
நந்திநா நாஸ்ய தத்வாஸ்
த்ருப்தம் ஶப்தம் ச தாஸ்யாம் யதி கபிவிக்ருதி
ஸ்ஸந்நாதந்த்ரஸ்யாஸ்॥

தேவர்களுடனும் அசுரர்களுடனும் கூடிய மூன்றுலகத்தையும் போரில் வென்று செருக்கடைந்தவனான நான் கைலாசத்துக்குச் சென்று, தேவியுடனும் கணங்களுடனும் கூடியிருந்த ஈசுவரனை அசைத்தேன்; அவரருள்பெற்று, நான் (மற்றவர்களை) ஆதரவு செய்யாததால், மலைமகளாலும் நந்தியாலும் சபிக்கப்பட்டேன்; அந்தச்சாபத்தால் குரங்குருவமெடுத்த நந்தியால் இது நிகழ்ந்திருக்குமோ?

விபீஷணன்:—(பிறகு அரங்கிற் புகுந்து, ஆச்சரியமடைந்து) மகாராஜருக்கு மாறுபாடான மதிவந்ததே! ஏனெனில்,

உபாயோக்தோ மைதிலீ தஸ்ய பஹுஶோ தீயதாமிதி।
ந மே ஶ்ருணோதி வசநம் ஸுஹ்ருதாம் ஶோககாரணாத்॥

இராமனிடம் மைதிலியைக் கொடுத்துவிடும்படி பலபடியாக நான் அவரிடம் உரைத்தேன்; அன்பர்களுக்குத் துன்பம் நிகழவேண்டிய காரணத்தால், என்சொல்லை அவர் கேட்கவில்லையோ! (நெருங்கி வந்து) மகாராஜர் வெற்றிபெறுக.

இராவணன்:—விபீஷண! வா வா! இருப்பாயாக.

விபீஷணன்:—இதோ உட்காருகிறேன் (அவ்வாறே செய்தல்)

இராவணன்:—ஓய்ந்துபோனவன்போல் நீ காணப்படுகிறுயே!

விபீஷணன்:—வேண்டுகோள் இல்லாமலே பணியாட்களின் விருப்பத்தைத் தெரிந்துகொள்பவரான தலைவரை அடைந்தவனுன எனக்கு (எப்பொழுதும்) ஓய்வுதானே!

இராவணன்:—இந்தக்கதை போதும், நிறுத்து; நீ சென்று, வானரனைக் கொணர்க.

விபீஷணன்:—உத்திரவுப்படி. (வெளியே செல்லுதல்)

(அரக்கர்களால் பற்றப்பட்ட ஹநுமான் அரங்கிற் புகுதல்.)

எல்லோரும்:—ஆ! இங்கே, இங்கே.

ஹநுமான்:—

நைவாஹம் யஷிடதஷெ ந நைஜைதந ஊாாதுநா ।
ஸ்வயம் து ஹணாவனொ ராக்ஷஸெஸஷிக்ஷயா ॥

அரக்கராசனைக் காணவிரும்பி நானுகவே பிடிபட்டேன்; அந்தக் கொடியோனுல் யான் வலிந்து கட்டப்படவில்லை. (நெருங்கி வந்து)

ஓ! அரசே! க்ஷேமமா?

இராவணன்:—(அவமதிப்புடன்) விபீஷண! அது இவனுடைய செயலா?

விபீஷணன்:—அதைக்காட்டிலும் அதிகமானது.

இராவணன்:—நீ எப்படி அறிவாய்?

விபீஷணன்:—"நீ யார் என்று" அவனை மகாராஜராகிய நீரே வினவவேண்டும்.

இராவணன்:—ஓ! வானர! நீ யார்? எக்காரணத்தையிட்டு மனவலியுடன் நம்முடைய அந்தப்புரத்திற் புகுந்தாய்?

ஹநுமான்:—ஓ! கேட்கப்படட்டும்.

அஞ்ஜநாயாம் ஸமுத்பந்நோ மாருதஸ்யௌரஸ: ஸுத:।
ப்ரேஷிதோ ராகவேணாஹம் ஹநூமாந்நாம வாநர:॥

நான் வாயுவுக்கு அஞ்சநாதேவியிடம் பிறந்த ஔரஸபுத்திரன்; ஹநுமான் என்று பெயருள்ள வானரன்; ஸ்ரீராகவனால் அனுப்பப் பெற்றேன்.

விபீஷணன்:—மகாராஜரே! கேட்டீர்களா?

இராவணன்:—கேட்டதால் என்ன?

விபீஷணன்:—பெரியோனான இராகவன் என்ன சொல்லுகிறான்?

ஹநுமான்:—இராமன் கட்டளையைக் கேட்பீர்களாக.

இராவணன்:—என்ன? என்ன? ராமன் "கட்டளை" என்று சொல்லுகிறாயா? ஆ! இந்த வானரன் வதைக்கப்படட்டும்.

விபீஷணன்:—பேரரசே! அருள்புரிக. தூதர்கள் எத்தகைய குற்றஞ்செய்தாலும், அவர்களைக் கொல்லுதல் கூடாது. இராகவன் செய்தியைக் கேட்டபிறகு நீவிர் விரும்பியவாறு செய்யலாம்.

இராவணன்:—அந்த மனிதன் என்ன சொல்லுகிறான்?

ஹநுமான்:—ஹா! கேட்கவேண்டும்.

வா ஶரணமுபைஷி ஶங்கரம் வா
ப்ரவிஶ ச து³ர்க³தலம் ரஸாதலம் வா।
ஶரவரபரிபி⁴ந்நஸர்வகா³த்ரம்
யமஸத³நம் ப்ரதியாபயாம்யஹம் த்வாம்॥

"சங்கரனை நீ சரணம்புகினும் செல்லொணாத பாதளத்துக்கே நீ சென்றாலும், பாணத்தால் துளைக்கப்பட்டவையான எல்லா உறுப்புக்களுடனும் உன்னை எமனுலகத்துக்கு நான் அனுப்புவேன்" என்று கூறினார்.

இராவணன்:—ஹ! ஹ! ஹ!

திவ்யாஸ்த்ரைஸ்த்ரிதசகணா மயாபிபூதா
தைத்யேந்த்ராச்ச வஶவர்த்திந: ஸமஸ்தா:।
பௌலஸ்த்யோப்யபஹ்ருதபுஷ்பகோவஸந்நோ
ஹோ! ராம: கதமபியாதி மாநுஷோ மாம்॥

தெய்வத்தன்மைவாய்ந்த அஸ்திரங்களையுடையவனுன என்னால் தேவகணங்கள் வெருட்டப்பட்டன; அசுரர்கள் எல்லோரும் எனக்கு வசப்பட்டவர்களே; புலஸ்தியன்மகனை குபேரனும் என்னால் புஷ்பகவிமானம் பறிக்கப்பட்டவனாய்த் துன்பமடைந்தான்; மனிதனான இராமன் என்னை எதிர்ப்பது எவ்வாறு?

ஹநுமான்:—இவ்வளவு வலிமைவாய்ந்த நும்மால் அவருடைய மனைவி மறைந்திருந்து கவரப்பட்டதேன்?

விபீஷணன்:—ஹநுமான் நன்கு உரைத்தான்.

அபவாஹ்ய மாயயா ராமம் த்வயா ராக்ஷஸபுங்கவ!।
பிக்ஷுவேஷம் ஸமாஸ்தாய த்வயைவாபஹ்ருதா ஹி ஸா॥

ஏ! அரக்கருட்சிறந்தோரே! மாயையால் இராமனை அப்புறப்படுத்தித் துறவிவேடம்பூண்டன்றோ உம்மால் அவர் (ஸீதை) கவரப்பட்டார்?

இராவணன்:—பகைவன்பக்கல் இருக்கிறாயா?

விபீஷணன்:—ப்ரஸீத ராஜந் வசநம் ஹிதம் மே
ஶ்ரூயதாம் ராவண யாசதே ந:।
இதம் குலம் ராக்ஷஸபுங்கவேந
த்வயா ஹி நேச்சாமி விநஶ்யமாநம்॥

பேரரசே! அருள்க. என் சொல் நன்மைபயப்பது. அரக்கருட்சிறந்தோரான உம்மால் நமது குலம் அழிவதை நான் விரும்பவில்லை.

இராவணன்:—விபீஷண! அஞ்சவேண்டா அஞ்சவேண்டா.

𑌕𑌥𑌂 𑌯𑌂𑌬𑌵𑌸𑌟𑌃 𑌸𑌿𑌂𑌹𑍋 𑌹𑌰𑌿𑌣𑍇𑌨 𑌵𑌿𑌨𑌿𑌪𑌾𑌤𑍍𑌯𑌤𑍇?।
𑌗𑌜𑍋 𑌵𑌾 𑌸𑍁𑌮𑌹𑌾𑌨𑍍 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌸𑍃𑌗𑌾𑌲𑍇𑌨 𑌨𑌿𑌹𑌨𑍍𑌯𑌤𑍇॥

தொங்குகிற பிடரிமயிர்களுடன் விளங்குகிற சிங்கம் மானுல் வீழ்த்தப்படுமா? பெரியதோர் மதயானை நரியால் மாய்க்கப்படுமா?

ஹநுமான்:—ஏ! இராவண! நலமற்ற நீ இராகவனைக் குறித்து இவ்வாறு உரைப்பது தகுதிதானோ?

ஓ! அப்படியன்று.

𑌨𑌕𑍍𑌤𑌂𑌚𑌰𑌾𑌧𑌿𑌪! 𑌰𑌾𑌵𑌣! 𑌰𑌾𑌘𑌵𑌂 𑌤𑌂
𑌵𑍀𑌰𑌾𑌗𑍍𑌰𑌗𑌣𑍍𑌯𑌮𑌤𑍁𑌲𑌂 𑌤𑍍𑌰𑌿𑌦𑌶𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌮𑍍।
𑌲𑍋𑌕𑍈𑌕𑌵𑌨𑍍𑌦𑍍𑌯! 𑌭𑌵𑌤𑌾 𑌸𑌚𑌿𑌵𑍇𑌨 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂
𑌵𑌕𑍍𑌤𑍁𑌂 𑌕𑌿𑌮𑍇𑌵𑌮𑍁𑌚𑌿𑌤𑌂 𑌮𑌦𑌸𑌾𑌰! 𑌨𑍀𑌚𑍈𑌃॥

அரக்கப்பதரே! இராவண! வீரர்களுள் முதன்மைபெற்றவராயும், தேவேந்திரனைப் போன்றவராயும், உலகுக்கே ஓர் ஸாரமாயும் உள்ள ஸ்ரீராகவனை வலிமைகுன்றிய நீ இழித்துப்பேசுவது பொருந்தியதோ?

இராவணன்:—என்ன? என்ன? பெயரைச்சொல்லி விளிக்கின்ருனே! இந்த வானரன் வதைக்கப்படட்டும்; இருக்கட்டும், தூதனைக்கொல்லுதல் இகழத்தக்கது; சங்குகர்ண! வாலில் தீ மூட்டி இந்தவானரன் வெருட்டப்படட்டும்.

சங்கு:—மகாராஜாவின் உத்திரவுப்படி; இங்கே, இங்கே.

இராவணன்:—அல்லது, இங்கேவா.

சங்கு:—நான் இதோ இருக்கிறேன்.

இராவணன்:—(அனுமானைநோக்கி) நான் சொன்னதாக அந்த மனிதனிடம்,

𑌕𑌥𑍍𑌯𑌤𑌾𑌂 𑌯𑌦𑌿 𑌰𑌾𑌮 𑌦𑌾𑌰𑌾𑌪𑌹𑌾𑌰𑌣𑌾𑌦𑌿𑌵𑌸𑌿।
𑌯𑌦𑌿 𑌤𑍇 𑌽𑌸𑍍𑌤𑌿 𑌯𑌶𑌃 𑌶𑍌𑌰𑍍𑌯𑌂 𑌵𑌾 𑌦𑍀𑌯𑌤𑌾𑌂 𑌮𑌮 𑌰𑌣𑍋𑌽𑌤𑍍𑌰 𑌹𑌿॥

“ஏ! இராமா! தாரத்தைக்கொணர்ந்ததால் நீ அவமதிக்கப் பட்டாய்; உனக்கு வில்வித்தையில் புகழ் இருக்குமானால், என்னோடு பெரிய போரைத் தொடுப்பாயாக” என்று கூறு.

ஹநுமான்:—விரைவில் காண்பீர்.

ஊஸிஹ தவாவவூ ெறாவ ாாட்டாம்
ாவ வா காலீகநாஷ நிஜி தஸ்வூ।
ஹாபி ரணவபிவீவிஎதை: ஸஜோஊ
வூஜேவவெநாஹிஸம்வு தாம் ஹூஸம்காூ॥

ஸ்ரீராகவன்வில்லோசையினாலே வெல்லப்பட்டவனாகிய நீ, சிறந்த மாளிகைகளும், கோபுரங்களும், மேன்மாடங்களும் தகர்க்கப்பட்டதாகவும், குரங்குக்கூட்டங்களால் அழிக்கப்பட்ட உய்யானங்களுடன் கூடியதாகவும் உன்னுடைய இலங்கையை விரைவிற் காண்பாய்.

இராவணன்:—இந்த வானரன் வெளியில் தள்ளப்படட்டும்.

அரக்கர்கள்:—இங்கே, இங்கே,

(அரக்கர்களுடன் அநுமான் வெளியே செல்லுதல்)

விபீஷணன்:—மகாராஜர் அருள்புரிக. மகாராஜருக்கு நலமான சிலசொற்களை உரைக்கவேண்டும்.

இராவணன்:—சொல்லலாம்; நல்லதாயிருந்தால் நாமும் கேட்போம்.

விபீஷணன்:—எல்லாப்படியாலும், அரக்கர்குலத்துக்கு அழிவுவந்துவிட்டதென்று நான் நினைக்கிறேன்.

இராவணன்:—எதனால்?

விபீஷணன்:—மகாராஜருடைய தீயநடத்தையால்.

இராவணன்:—என்னுடைய தீயநடத்தை எது?

விபீஷணன்:—ஸீதையைக் கவர்ந்ததே.

இராவணன்:—ஸீதையைக்கவர்ந்ததால் என்னகுற்றம்?

விபீஷணன்:—பாவமும்.

இராவணன்:—“உம்”மையால் எஞ்சிய பகுதியும் உளது போலும்; அதையும் உரைப்பாயாக.

விபீஷணன்:—அதுவோவென்றால்,

இராவணன்:—விபீஷண! ஏன் மறைக்கிறாய்? நீ உண்மையை உரைக்காவிட்டால் உன்னைச் சபித்துவிடுவேன். என் உயிரின் மேல் ஆணை.

விபீஷணன்:—மகாராஜர், எனக்கு அபயம் அளிக்கவேண்டும்.

இராவணன்:—அபயமளித்தேன்; சொல்லுவாயாக.

விபீஷணன்:—வலியவனோடு போர்.

இராவணன்:—“வலியவனுடன் போர்” என்றால் என்ன?

ஶத்ருபக்ஷமவாஶ்ரித்ய மாமயம் ராக்ஷஸாதமஃ ।
க்ரோதயமாஹாரயம்ஸ்த்வபூர்வாஹீரப்ரதிபாஷதே ॥

அரக்கருள் இழிந்தோனான இவன் பகைவன்பக்கல் பற்றுடையனாய் எனக்குக் கடுஞ்சினத்தை மூட்டிச் சிறிதும் அஞ்சாது என்னுடன் வாதாடுகிறான். யாரடா இங்கே?

மாமநவேக்ஷ்ய ஸௌஹார்தம் ஶத்ருபக்ஷமவாஶ்ரிதம் ।
நேஷ்டோ ஹைவாஹமேதம் த்ரஷ்டும் தஸ்மாத்தேஶாந்நிரஸ்யதாம் ॥

என்னைப்பொருட்படுத்தாது, பகைவன்பக்கலிற் பற்றுடையவனாயிருப்பவனான இவனைக் காண எனக்கு விருப்பம் இல்லை; ஆதலால் இவனை வெளியேற்றுவீர்களாக.

விபீஷணன்:—மகாராஜர் அருள்புரிக, நானே சென்றுவிடுகிறேன்.

ஶாஸிதோஹம் த்வயா ராஜந்! ப்ரயாமி ந ச தோஷவாந் ।
த்யக்த்வா ரோஷம் ச காமம் ச யதா கார்யம் ததா குரு ॥

அரசே! உம்மால் ஆணையிடப்பட்டேன்; குற்றமற்றவனான நானே சென்றுவிடுகிறேன்; சினத்தையும் காமத்தையும்விட்டுப் பொருந்திய செயலைச் செய்வீராக.

(சற்றுநடந்து) இப்போது நான்,

அத்யைவ தம் கமலலோசனமுக்ரசாபம்
  ராமம் ஹி ராவணவதாய க்ருதப்ரதிஜ்ஞம் ।
ஸம்ஶ்ரித்ய ஸம்ஶ்ரிதஹிதவ்ரதினம் ந்ருதேவம்
  நஷ்டம் நிஶாசரகுலம் புனருஜ்ஜீவயிஷ்யே ॥

தாமரைக்கண்ணனும் சிறந்த வில்லாளியும், இராவணனை மாய்ப்பதில் உறுதிகொண்டவனும், அடுத்தவர்களைக் காக்கவல்லவனெனப் பெயர்பெற்றவனும் ஆன ஸ்ரீராமனாகிய இறைவனை இன்றைக்கே அணுகி, அழிந்துபோன அரக்கர்குலத்தை மறுபடியும் ஓங்கச்செய்வேன்.

(வெளியே செல்லுதல்.)

இராவணன்:—ஆ! விபீஷணன் வெளியேறினான். நானும் நகரத்தைக் காப்பதில் முயல்வேன்.

(வெளிச்செலல்)

மூன்றாவது அங்கம் முற்றிற்று.

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமி சாஸ்த்ரி, B.A., B.L.
மதுரை.

உ

யவனர்வரலாறு.

[யாழ்ப்பாணம் ஸ்ரீமான். த. இராமநாதபிள்ளை B.A., (LOND.) அவர்கள்.]

(௩௨௪-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

மிதிருடாற்றிய யுத்தம் I, II.

கி. மு. 95-ஆம் ஆண்டு மிதிருடாற்றிஸ் என்பான் பொந்தஸ் என்னும் நாட்டிற்கு அரசனாகி மிகவும் ஆற்றலுடையவனாய்க் கருங் கடற்கரை நாடுகளைத் தன் கப்பற்படையாற் கலக்கினான். அவன் கப்படோக்கியநாட்டிற்குத் தன் மகனை மன்னனாக நியமிக்க, அந் நாட்டுமக்கள் உரோமருதவியோடு அரியோபாசனஸ் என்போனை வேந்தனாக ஏற்றார்கள். ஆர்மீனிய தேசத்து வேந்தன் இரைக்கிறானிஸ் மிதிருடாற்றிஸ் என்னும் மன்னனோடு ஒன்றுபட்டு அரியோபாசனஸ் என்போனைத் துரத்த, உரோமர் மீட்டும் அவனுக்குக் கப்படோக்கியநாட்டரசுரிமையை அளித்தார்கள். கி. மு. 88-ல் மிதிருடாற்றிஸ் தன் மகள் கிளியோபாத்திராவை ஆர்மீனியதேச வேந்தனுக்கு மணஞ்செய்துதந்து அவனுடைய துணையைப் பெற்றான். மேலும், கடற்கள்வரையும் துணைவராக்கிக்கொண்டான். கிரேக்கரின் துணையையும் ஒற்றரால் உசாவினான். உரோமர் கீழ்த் தலைவன் ஆக்கூலியஸ் என்போனை மிதிருடாற்றிஸ் வென்று சிறையிட்டானாக, சின்னாசியாநாட்டோர் யாவரும் உரோமருக்குப் பகையாக எழுந்தனர். மிதிருடாற்றிஸ் 80,000 உரோமர்குடிகளைக் கொன்று கி. மு. 87-ஆம் ஆண்டு பேர்காமத்தைத் தன் தலைநகராக்கிக்கொண்டு கிரேக்கரை உரோமருக்கு விரோதமாகத் தூண்டினான். இவ்விவரங்களை அறிந்த மேன்மக்கட்சபையோர் மிதிருடாற்றிஸ் என்னும் வேந்தன்மிடலை அடக்கும்படி சுல்லாவை ஏவ, சுல்லா வேந்தனோடு உடன்படிக்கை எழுத முயன்றும், வேந்தன் உடன்படாமையாற் போர் நடாத்தினான். கி. மு. 86-ல் சுல்லா ஏதென்ஸ்நகரைப் பற்றினான். பகைவருடைய கப்பல்களைக் கடந்து சின்னாசியாவுக்குப் போகவியலாமல் சுல்லா கிரேக்கநாட்டிலே நின்றானாக, பிளாக்கஸ் சுல்லாவின் தலைமையை

நீக்கித் தான் தலைவனாதற்குக் கிரேக்கநாட்டில் இறங்கினான். அவனுடைய படை அவனோடு விரோதித்துச் சுல்லாவின் படையோடு சேர்ந்தது. கி. மு. 85-ஆம் ஆண்டு சுல்லா ஓச்சீமினஸ் களத்தில் மிதிருடாற்றிஸ் வேந்தனை வென்றான். சுல்லாவின் கீழ்த்தலைவன் லுக்கூலஸ்சின்னாசியாநாடுகளை அடக்கினான். மிதிருடாற்றிஸ் தான் வென்ற நாடுகள் யாவற்றையும் இழந்தானாகி 3000 பொன் கொடுத்து உடன்படிக்கையும் எழுதிக்கொண்டான். சுல்லா சின்னாசியாவை ஆட்சிசெய்தற்கு முறீனாவைத் தலைவனாக்கியபின் உரோமாபுரத்தை நோக்கினான். முறீனா மிதிருடாற்றிஸ்வேந்தனோடு கலகம்விளைத்துத் தோல்வியுற்றானாக, சுல்லா சமாதானமாகும்படி கற்பித்துப் புலம்பெயர்ந்தான். மிதிருடாற்றிஸ் தன் படைவீரரைப் போர்முறைகளிற் பழக்கிக் குடிகளைக் காத்தோம்பினான்.

சுல்லா உரோம்நகரத்தை அடைந்து குடியாசுக்கட்சியினரை அடக்கியபின் ஐபீரியாவை அடக்குமாறு சில படைகளை அனுப்பினான். சேட்டோறியஸ் ஐபீரியரை உரோமருக்கு விரோதிகளாக்கியிருந்தான். இலேப்பிடஸ் தலைவனும் அவனுக்கு உதவிசெய்தான். கி. மு. 76-ல் பம்பீயஸ் ஐபீரியாவுக்குத் தலைவனாகச் சென்று அலைந்து ஒருவருடம் கழிந்தபின் சேட்டோறியஸ் என்னும் வீரனை ஒருபோரில் வென்றான். கி. மு. 72-ஆம் ஆண்டு சேட்டோறியஸைப் பேர்ப்பென்னா என்னுங் கீழ்த்தலைவன் கொல்வித்தான்.

வாள்வீரர்போர். கி. மு. 73—71.

கி. மு. 73-ல் வாட்போர்ப்பயிற்சிக் கழகத்தில் பழகும் வீரர் உரோமரோடு பகைத்தெழுந்து ஸ்பாடக்ஸ் என்னும் வீரனைத் தலைவனாக்கினார்கள். இஃதறிந்த அடிமைகளும் தந்தொழில்விட்டு வாட்படையினரோடு சேர்ந்தார்கள். கி. மு. 71-ஆம் ஆண்டு ஸ்பாடக்ஸ் தென் இத்தாலியா முழுவதிலும் தனது ஆணையைச் செலுத்தினான். கிறசஸ் என்னும் செல்வன் உரோமர்படைத் தலைவனாகச் சென்று வாள்வீரரை வென்றான். பம்பீயஸ் தலைவனும் வாள்வீரரோடு பொருது வென்றான். கிறசஸ்தலைவனும் பம்பீயசும் தத்தம் படையோடு உரோமாபுரத்திற்குச் சென்று

மேன்மக்கட்சபையினரை வெருட்டினார்கள். பம்பியஸ் கிறசஸ் என்னும் இருதலைவர்கள் சுல்லாவின் தீர்மானங்களை அழித்துக் கீழ்மக்கட்காவலருக்கு அவர்களுடைய பழைய உரிமைகளை அளித்து உரிமைக்கணக்கன் ஒருவனைத் தெரிந்து அரசாங்கத் தலைவர்களின் உரிமைகளை ஆராயும்படி கற்பித்துத் தாமும் இணைத் தலைவராகி அதிகாரஞ்செலுத்தினார்கள்.

மூன்றும் மிதிருடாற்றிய யுத்தம்.

உரோமருக்கு நன்கொடையாக அளிக்கப்பட்ட பிதினியா நாட்டை மிதிருடாற்றிஸ் தனது ஆட்சிநாடாக்கமுயன்றான். கடற் கள்வர் இப்போரிலும் வேந்தனுக்குத் துணைசெய்தார்கள். லூசியஸ் லுக்கூலஸ் தன் படையொடு சென்று கபிராக்களத்தில் வேந்தனைப் புடைத்தான். வேந்தன் ஆர்மீனியதேசத்து இரைக்கிறனீஸ் என்னும் வேந்தனிடம் அடைக்கலம்புகுந்தானாக, உரோமர் மிதிருடாற்றிஸ் என்னும் வேந்தனைத் தம்மிடம் ஒப்புவிக்கும்படி இரைக்கிறனிஸ் என்னும் மன்னனை வெருட்டினார்கள். லுக்கூலஸ் 15000 படையோடு ஆர்மீனியாநாட்டுச் சேட்டா என்னும் தலைநகரை முற்றுகையிட்டான். இதற்கிடையில் மிதிருடாற்றிஸ் தன்னூர்க்குச்சென்று உரோமர்சிறுபடையொன்றை அட்டுத்தொலைத்தான். லுக்கூலஸ் என்னும் தலைவன்படை அவனுக்கு விரோதமாக எழுந்ததாக, லுக்கூலஸ் போர்துறந்து சிற்றின்பவாழ்க்கையிற் களித்துக் காலங்கழித்தான். படையின்தலைமையை நடாத்தற்குக் கிளாபிறியோ என்பான் அனுப்பப்பட்டான். கி. மு. 67-ஆம் ஆண்டு கீழ்மக்கட்காவலன் மானிலீயஸ், பம்பீயஸ் என்பானைப் படைத் தலைவனாக ஆசியாவுக்கு அனுப்பவேண்டுமெனப் பிரேரித்தான். பம்பீயஸ் கி. மு. 66-ல் புறப்பட்டு மிதிருடாற்றிஸ் இரைக்கிறனிஸ் முதலியோரின் செருக்கை அடக்கித் திரும்பினான். மிதிருடாற்றிஸ் வேந்தன்குடிகள் பலபோர்களிற் சேவித்து இளைத்துப் பொருளின்மையால் அரசிறைகளும் கடமைகளும் அளிக்க இயலாமல் வேந்தனை வெறுத்தனராக, வேந்தன்மகனும் தந்தைக்கு விரோதியானான். மிதிருடாற்றிஸ் அஞருற்றுத் தற்கொலைபுரிந்துகொண்டான்.

நாவலன் சிசரூே: கி. மு. 166—43.

சிசரூே என்பான் அரிம்மியம் என்னும் நகரில் வசித்த ஒரு நடுப்பிரிவினன் மகன். இவன் சொற்பொழிவாற்றலுடையவனுகி உரோமநாவலருள் சிறந்து ஒப்பாருமிக்காருமின்றித் திகழ்ந்தான்; நீதிமன்றங்களில் நியாயதுரந்தரனுகிப் பொருளீட்டினுன்; கி. மு. 66-ல் ஒரு கீழ்த் தலைவனுகப் பம்பீயஸின் கட்சியைச் சார்ந்து மானிலியஸ் கொணர்ந்த பிரேரணையை வழிமொழிந்து பம்பீயஸ் என்பானைச் சின்னுசியாவுக்குத் தலைவனுக அனுப்பினுன். அவன் மேன்மக்கட்கட்சி குடியரசுக்கட்சி இரண்டையும் சாராமல் நடுநிலைமை வழுவாமல் பொதுநன்மையைக் கருதினுன். சிசரூே அரசியல் செலுத்தியவரலாற்றை வந்துழிக் காண்க.

காயஸ் யூலியஸ் கைசர்: கி. மு. 102—44.

காயஸ் யூலியஸ் கைசர் மேன்மக்கட்குலத்துதித்தோனுயினும் குடியரசுக்கட்சியையுஞ் சார்ந்தவன். கைசரின்மாமி, யூலியா மாறியஸ் என்னும் தலைவனின் தாயாதலாலும் கைசர் சின்னு என்னும் தலைவன் மகளை மணஞ்செய்துகொண்டமையாலும் குடியரசுக்கட்சியினனுகப் பாராட்டப்பட்டான். கைசரைச் சின்னுவின்மகளை மணஞ்செய்துகொள்ளவேண்டாமெனத் தான் தடுக்கவும் அக்கட்டளையைப் பொருட்படுத்தாமல் அவன் மணஞ்செய்துகொண்டதைக் கேள்வியுற்ற சுல்லா “மாறியஸ்தலைவன்போன்ற பலவீரரின் வன்மை இக் கைசர்ச்சிறுவன் ஒருவன் மிடலுக்கு ஒப்பாகாது,” எனக் கூறினுன். சுல்லா கொடுங்கோல் செலுத்திய காலத்தைக் கைசர் ஆபிரிக்காதேசத்துக் காட்டிற் கழித்தான். சுல்லா இறந்த பின் கைசர் தாய்நாட்டுக்குத் திரும்பும்பொழுது கடற்கள்வர் கைப்பட்டு, “மூடராகிய நும்மைத் தொலைப்பேனென” அவர்களைப் பயமுறுத்தினுனென்றும், பொருள்கொடுத்து விடுதலையடைந்து பின்னர் உரோமர்படையோடுசென்று அக்கள்வரை அட்டுத் தன் வாக்கை நிறைவேற்றினுனென்றும் கட்டுரைகள் விளம்புகின்றன. அவன் பின்பு தூர்த்தரோடுகூடிப்

படிற்றொழுக்கம் பூண்டு வீணாகக் காலத்தைக் கழித்து அக்கூடா வொழுக்கத்தின் பயனாகக் கடன்காரனானான். கி. மு. 68ம் ஆண்டு அவன் பொருட்கணக்கனாகத் தெரிந்தெடுக்கப்பட்டான். பம்பீயஸ் மேன்மக்கட்கட்சியைச் சார்ந்தானாகக், கைசரைப் பொதுமக்கள் ஒருவீரனாகவே மதியாமையால் கிரூசஸ் என்னும் செல்வனைக் குடியரசுக்கட்சித்தலைவனெனப் பாராட்டினார்கள்.

கற்றிலினாவின் கலகம்.

கற்றிலினா அரசியலைச் சீர்திருத்த முயன்றானாகக் கைசரும் கீழ்மக்கட்கட்சியைச் சார்ந்தானாகிப் பம்பீயஸின் கட்சியை எதிர்த்தான். பொதுமக்கள் கற்றிலினா கைசர் என்போரைத் தலைவராகத் தெரிந்தெடாமல் சிசரோவை இணைத்தலைவருள் ஒருவனாக கி. மு. 64-ஆம் ஆண்டுத் தேர்தலில் தெரிந்தெடுத்தார்கள். கைசரின் நண்பன் அந்தோனியா கீழ்த்தலைவருள் ஒருவனாகி மசிடோனியாவை ஆளப்போனான். இது நிற்க. கற்றிலினா அரசாங்கத்திற்கு விரோதியாகிக் கலகம்விளைத்தற்குச் சூழ்ச்சிசெய்தான். காவலன் சேவியஸ் றுல்லஸ் கம்பேனிய நிலங்களைக் கீழ்மக்களுக்களித்தற்குப் பதின்மர்சபையை நிறுவி அதற்குத் துணையாக 200 நடுப்பிரிவினரைத் தெரிந்தெடுக்கவேண்டுமெனவும் அச்சபையின் செலவுக்கு மசிடோனியாவிலுள்ள பொதுநிலங்களை விற்றுப் பொருள்வருவாயைப் பெறவேண்டுமெனவும் கூறினானாக, சிசரோ அப்பிரேரணையை எதிர்த்தான். பொதுமக்களும் பம்பீயஸின்கட்சியைச் சார்ந்தனராகலின், அப்பிரேரணையை அங்கீகரிக்கவில்லை. கற்றிலினா வம்பப்பரத்தரையும் தீவினையாளரையும் தன் கேளிராகிய தூர்த்தரையும் கூவியதன்றி, எற்றூறியநாட்டாரிடம் துணைபெறுதற்கு ஒற்றரையும் அனுப்பினான். அவ்வாண்டுத் தேர்தலில் கற்றிலினா பொதுமக்களின் நன்மைக்காகவும் தேசத்தொண்டுசெய்தற்காகவுமே தான் தலைமை வேண்டியதாகச் சாற்றியும் மக்கள் கற்றிலினாவை ஒரு கீழ்த்தலைவனாகவும் தெரிந்தெடுக்கவில்லை. சிசரோ கற்றிலினாவின் முயற்சியை அறிந்து அவன் அரசாங்கத்துரோகமென்னுங்குற்றம்

இழைத்தானென்ன மேன்மக்கட்சபையில் சான்றுகூறினன். மேன் மக்கட்சபையார் கற்றிலினவைத் தாய்நாட்டிற்குப் பகைவனெனத் தீர்மானித்து அவனைச் சிறையிடும்படி அந்தோனியோவை ஏவினர் கள். கற்றிலின சனிபகவான்விழாக்காலத்தில் குடியரசைநாட்ட வேண்டுமெனத் தன் கட்சியாருக்கு அறிவித்து அலபிரோக்கியக் கல்லியரிடம் துணைபெறுதற்குக் கடிதமும் அனுப்பினன். அலபி ரோக்கியர் அக்கடிதத்தைச் சிசரோவிடம் இடுவித்தனர். கற்றிலின கலகம்விளைக்குமுன் சிசரோ மேன்மக்களுக் கறிவித்துக் கற்றிலின வையும் அவன் துணைவரையுஞ் சிறையிட்டான். சிசரோ மேன் மக்கட்சபை முன்றிலில் வழக்குரைக்கக் கைசர் கற்றிலினவையும் அவன் துணைவரையும் மன்னிக்கவேண்டுமெனக் கேட்டானென் றும், கேற்றோ அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கவேண்டு மென்று வாதித்தானெனவும் அறிகிறோம். இங்ஙனம் சபையில் வாதம் நடந்து முற்றுப்பெறுமுன் சிசரோ கற்றிலின முதலியோ ரைச் சிரச்சேதஞ்செய்வித்தான். குடிகளின்கருத்தையறிந்தும் சிசரோ கற்றிலின முதலியோர்களைக் கொல்வித்தது முறையன்று. கற்றிலினவின் கட்சியார் தோல்வியடையக் குடியரசுக் கட்சியாரின் ஆற்றலுங் குன்றியது. பம்பீயஸ் எகிப்திலிருந்துமீண்டு ஆங்குத் தான்பெற்ற வெற்றிக்காக ஊர்வலம்வந்தான்.

மூவர் கூட்டம்.

பம்பீயஸ் இணைத்தலைவருள் ஒருவனகத் தெரிந்தெடுக்கப்பட் டான். லுக்கூலஸ், கேற்றோ என்போர் பம்பீயஸின் எதிரிகளாகை யால் பம்பீயஸின் சின்னசியாநாட்டு அரசியல் ஒழுங்குகளை ஒவ் வொன்ருகத் தேர்தல் அவசியமென வாதித்தனராக, ஐபீரியாவில் தேசாதிபதியாகவிருந்து பொருள்தேடிப் பெயர்ந்த கைசரின் துணை யையும் கிறசஸ் என்னும் செல்வனின் துணையையும் பம்பீயஸ் வேண்டினன். கிறசஸ், பம்பீயஸ், கைசர் என்னும் மூவரும் ஒரு கூட்டமாகி அரசியலை மூவர்கூட்டத்தால் நடாத்துதற்குத் துணிந் தார்கள். இம்மூவருங்கூடிய முதற்கூட்டம் கி. மு. 60-ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. கி. மு. 59-ம் ஆண்டு கைசர் இணைத்தலைவனகி மேன்

மக்கள் பம்பீயஸுக்கு மறுத்தவற்றையெல்லாம் தன்னதிகாரத்தால் அளித்தான். இங்ஙனம் கம்பேனியநிலங்களைப் பம்பீயஸின் படைவீரருக்குக் கைசர் அளித்தற்குப் பதின்மர்ஸபை தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்றும் பம்பீயஸின் கின்னசியாநாட்டு அரசியல் ஒழுங்கை மேன்மக்கட்சபை அங்கீகரிக்கவேண்டுமென்றும் கைசர் பிரேரித்தானாக, மேன்மக்கட்சபை அதற்கு உடன்படாமையால் அவன் படைவீரர்சபையில் அப்பிரேரணையைப் பிரேரித்துத் தீர்மானமாக்கினான். கைசர், கல்லியா இலீறியா என்னும் நாடுகளுக்குத் தேசாதிபதியாகவேண்டுமெனப் பிரேரிக்கப்பட்டான். கைசர் பலகாலமாக விழைந்த படைத்தலைமையைப் பெற்றான். கைசர் மூவர்கூட்டத்தைப் பலப்படுத்தற்குத் தன் மகளைப் பம்பீயஸுக்கு மனைவியாக அளித்தான். கி. மு. 58-ம் ஆண்டு குளோடியஸ் புல்கர் என்னும் மேன்மகனது தீர்மானத்தால் கைசர் கல்லியாவை ஆளுதற்கும் பம்பீயஸ் இத்தாலிய நாட்டு அரசியலை நடாத்தற்கும் கேற்றோ சைப்பிறஸ்தீவை ஆளுதற்கும் நியமிக்கப்பட்டனர்.

குளோடியஸ் மைலோ என்போரின் கட்சிக்கலகம்.

கி. மு. 62-ம் ஆண்டு கைசர் சமயத்தலைவனாகத் தெரிந்தெடுக்கப்பட்டான். கைசரின் இல்லத்தில் ஒரு தேவதைக்கு விழா நடந்துழி ஆடவர் அவ்விழாவில் சேர்தல் முறையன்றாயினும் குளோடியஸ், கைசரின் மனைவியின் அனைவால் வீணை கையேந்திப் பெண்வேடம் பூண்டு, விழாக்கொண்டாடினான். அவ்வேடம் அறிந்த சிலர் உடனே அவனை இல்லத்தினின்றும் அகற்றினார்கள். அவ்வாசாரக்குற்றத்தைச் சிசறோ எடுத்துரைத்தான். சிசறோவின்சாட்சியைப் பொய்ச்சான்றெனக் காட்டுதற்குக் குளோடியஸ் 'நான் அவ்விழாக்காலத்தில் வேற்றுப்புலத்தில் இருந்தே'னென காட்ட முயன்றும் சிசறோ அவ்வுரையைப் பொய்யுரையென விளக்கினான். அன்றுதொட்டுக் குளோடியஸ் தான் கீழ்மகனெனக் கூறிக் குடியரசுக் கட்சியைச் சேர்ந்து சிசறோ பம்பீயஸ் முதலியோரை எதிர்த்தான்.

குடிகள் யாவரையாயினும் பொதுமக்களின் அனுமதியின்றிக் கொலைத்தண்டம் விதிப்போன் யாவனாயினும் நாடுகடத்தப்படுவானென ஒரு பிரேரணையைக் குளோடியஸ் பிரேரித்தான். அப்பிரமாணம் சிசரோவின் பெயரைச் சிறப்பாகச் சுட்டாவிட்டாலும் சிசரோ நாடு நீங்கிப் பிறநாட்டிற் சஞ்சரித்தான். குளோடியஸ் சில தீவினையாளரோடு கூடி நாடோறும் கொலை களவுகள் காமம் தீயிடுதல் என்னுந் தீவினைகளைச் செய்தனன். மேன்மக்களின் மானத்தைத் தன் சிரமேற்கொண்ட மைலோ என்போன் ஒரு கட்சிசேர்த்துக் குளோடியஸின் கட்சியை எதிர்த்தான். மன்றங்களிலும் மறுகுகளிலும் முச்சந்திகளிலும் நாற்சந்திகளிலும் நாடோறும் இருகட்சியாருங் கலகப்பட்டனர். சிசரோமுதலியோர் தாய்நாடுதிரும்புதல் அவசியமென்று பம்பீயஸ் மொழிந்து மைலோவின் துணையால் பிரேரணையைத் தீர்மானமாக்கினான். சிசரோவைச் சனங்கள் கைகொட்டி வரவேற்றனரென்று சிசரோவின் கடிதங்களால் அறியலாம். பம்பீயஸ் படைத்தலைமை விழைந்தும் அது பெருமையால் தானியத்தலைமையை ஐந்துவருடத்திற்கு ஏற்றான். கி. மு. 56-ஆம் ஆண்டு சிசரோ கைசரின் சீர்திருத்தப் பிரமாணங்களைத் தேர்ந்து களையவேண்டுமென அறிவித்தான். பின்பு சிசரோ பம்பீயஸ் கிரசஸ் என்போரின் தலைமையில் 200 மேன்மக்கள் ஒரு கூட்டங்கூடி பம்பீயஸும் கிரசஸும் இணைத்தலைவராகிக், கிரசஸ் சிரியாநாட்டிற்கும் பம்பீயஸ் ஐபீரியாநாட்டிற்கும் படைத்தலைவராகவேண்டுமெனத் தீர்மானஞ்செய்தனர். இத்தீர்மானத்தைக் கேற்றோ எதிர்த்தான். அக்கூட்டத்தோர் கைசருக்கு இவ்வொழுங்கு பிரியமாகாதென எண்ணி அவனைத் திருப்திசெய்வித்தற்காக அவனுக்குக் கல்லியநாட்டுப்படைத்தலைமையை 5 வருடத்திற்கு அளித்தனர். கி. மு. 52-ஆம் ஆண்டு மைலோ இணைத்தலைவருள் ஒருவனாதற்கு விரும்பினனாக, குளோடியஸ் கலகம் விளைத்து அக்கலகத்திற் புண்பட்டு இறந்தான். குளோடியஸின் கட்சியார் மைலோவின்வீட்டிற்குத் தீயிட்டனராக, மேன்மக்கள் பம்பீயஸைத் தனித்தலைவனாக நியமித்தார்கள்.

கி. மு. 53-ஆம் ஆண்டு கிருசஸ் தலைவனும் சிரியாதேசத்திற்குச் சென்றான். பாரதியாநாட்டு வேந்தன் மிதுருடாற்றிஸ் தனது சகோதரன் ஒரோடிஸ் என்பவனுக்கு எதிராகச் சிரியா நாட்டு உரோம தேசாதிபதி கபினியஸ் என்பவன் துணையை இரந்தான். கபினியஸ் அக்காலத்தில் தொலேமி அவுலேற்றிஸ் என்போனுக்கு எகிப்துநாட்டின் அரசுரிமையை அளிக்கமுயன்றான். இதற்கிடையில் மிதுருடாற்றிஸ் கொல்லப்பட்டான். கிருசஸ்தலைவன் உரோமர் யாவரினும்பார்க்கப் பொருட்செல்வம் உடையோனாயினும் பொருளாசையினாற் சிரியாநாட்டில் பெருந்தொகைத் திரவியந் தேடலாமென்று எண்ணினான். கிருசஸ் யுபிறேற்றிஸ் நதியைக் கடந்து வனாந்தரத்தில் வழிதெரியாமையால் பார்தியனொருவன் வழிகாட்டச் சென்றான். அவ்வழிகாட்டினோன் ஒரோடிஸ் என்பவனின் ஒற்றன். அவன் கிருசஸ் தலைவனை ஏமாற்றி நீங்கினான். ஒரோடிஸ் படையெடுத்துச் சுரத்தின் வழிகளை நன்று அறிந்தோனாகையால் கிருசஸ் என்பவனுடைய படையை நாசமாக்கி அவனையுங் கொன்று உரோமருடைய துவசங்களையும் கைப்பற்றினான். இப்போர் நடந்தது கர்காயிக் களத்தில் என்க. உரோமர் இத்தோல்வி பெரிய அவமானத்தை விளைத்ததென எண்ணித் துயருற்றனர். பிற்காலத்துப் புலவர்கள் தலைவர்களைப் பார்த்தியரை அடக்கும்படி தூண்டினார்கள். கிருசஸ் இறந்தமையாலும் மேன்மக்கட்கட்சியைப் பம்பீயஸ் சேர்ந்தமையாலும் மூவர்கூட்டங் குலைந்தது.

[தொடரும்.]

உ

பழனிக்கோவை.

[௩௪௨-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

22. குறிப்பறிதல்.

சதுச்சிரன் சூழ்பழ னிக்கந்தர் சாய்த்த தருத்தழையைப்
புதுச்சுவர்பாய்விடையன்ஞன்கைக்கண்டுமுன்போக்குரைத்தேன்
கொதிச்சு வடுப்பட்ட நெஞ்சாய்க் குழைமுகங்கோட்டல்கண்டேன்
மதுச்செறி தார்க்குழ லாய்கண்டி லேனின்ரூேர் மாற்றங்களே. ()

கையுறையெதிராது பொய்யுரைத்தெய்தும்
வகையறியேனென நகையிழைக்குரைத்தது.

23. குறிப்பறிந்துகூறல்.

விசும்பிடி போற்குன்றங் கொன்றவெள் வேலர் வியன்பழனி
யசும்பிடி ஆறமிர் தன்னசொல் லாய்நம் மருவரையாந்
தசும்பிடி யப்பொருங் குஞ்சரம் வெஞ்சரத் தாற்றடிந்தார்
பசும்பிடி கொண்டும்வந் தாற்றடுப் பேங்கொல் பயஞ்சிந்தியே. (112)

கையுறைகாட்டித் தையல்குறிப்பறிந்
தாங்கவன்வண்மை பாங்கிபகர்ந்தது.

இவையிரண்டிற்கும் மெய்ப்பாடு—அழுகையைச் சார்ந்த பெருமிதம்.
பயன்—குறைநயப்பித்தல்.

24. வகுத்துரைத்தல்.

அகத்திய ரீசன் மணங்காணிற் றென்புவி யாரளிப்பா
ரிகத்தியற் கித்தழை நீத்தா லவன்மட லேறுமன்ரூே
மகத்தியன்மேட முகைத்தோர் பழனியில் வாரணப்போர்
முகத்தயி லேவிச் செகுத்தாற்கென் ஞஞ்செய்து மொய்குழலே. ()

நன்னுதன்முன்ன நறுந்தழைகொணர்ந்த
மன்னுயிர்ப்பாங்கி வகுத்துரைத்தது.

25. தழையேற்பித்தல்.

கருங்கந் தரன்றந்த செவ்வேள் பழனிக் கனங்குழலா
யிருங்கந் தரமன்ன கையா னளிவைத் தெளிதிற்றந்தான்
அருங்கந்த மாதனத் தல்லா திலைமற் றயல்செலினும்
பருங்கந்த மாதனத் தல்லா திராதிந்தப் பைந்தழையே. (114)

கையுறைபுகழ்ந்து தையல்கைக்கொடுப்பது.

இவையிரண்டிற்கும் மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—கையுறையேற்பித்தல்.

26. தழைவிருப்புரைத்தல்.

மாதங்க மாதை மணந்தோர் பழனியின் மன்னவின்னே
நீதந்த பூந்தழை யான்றந்த போதந்த நேரிழைகைப்
போதுந் திருமுகப் போதுந் தழைத்தெப் போதுமுலை
மீதுங் கடிமண நாட்கும்பம் வேய்ந்தென்ன மேவினவே. (115)

இழைபுரை நுசுப்பின டழைவிருப்புரைத்தது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—தலைமகனையாற்றுவித்தல்.

சேட்படை முற்றும்.

கஉ. பகற்குறி.

13 குறியிடங் கூற லாடிடம் படர்தல்
குறியிடைச் சேற விடத்துய்த்து நீங்கல்
உவந்துரைத் தலொடு மருங்கணைதல்
அறிவறி வித்தலவ னுண்மகிழ்ந் துரைத்தல்
ஆயத் துய்த்த றேழிவந்து கூடல்
ஆடிடம் புகுத றனிகண் டுரைத்தல்
தடமென் முலையாள் பருவங் கூறி
வரவு விலக்கல் வரைவுடம் படாது
மிகுத் துரைத்த லொடுமெய் யுரைத்தல்
வருத்தங் கூறன் மாதர்கினை வுரைத்தல்
இற்செறி வறிவித்த றமர்கினை வுரைத்தல்
எதிர்கோள் கூற லேறுகோள் கூறல்

ஏதிலார் தம்முரை கூற லவளொடு
கூறுவாள் போன்று தினைமுதிர் வுரைத்தல்
பகல்வரல் விலக்கல் பையு ளெய்தித்
தினையொடு வெறுத்தல் சிறைப்புற மாக
வேங்கையொடு வெறுத்தல் வெற்புயர் நாடற்குக்
கழுமலுற் றிரங்கல் கடிப்புனங் கையறக்
கொய்தமை கூறல் பிரிவருமை கூறல்
வனக்கிளிமேல் வைத்தறி வித்தல்
மயிலொடு கூறல் வரும்புனங் காண்டல்
பயில்பதி நோக்கிப் பதிமிக வாடல்
சொன்னநா லெட்டுந் தோன்று மியற்கை
மன்னிய பகற்குறி வகையா கும்மே.

1. குறியிடங்கூறல்.

ஐங்கரன் பின்னவர் வையா புரியி லருக்கன்மதி
தங்கா வைப்பண்டு காட்டலிற் றானவர் சாய்ந்தமிர்தை
யுங்குறச் சேமித்துச் சூழ்ந்தது போற்பளிங் கோங்கல்புன்னைப்
பொங்கர்பெற்றேமென் றுமென்றாழ்புகா துண்டோர்பூம்பொழிலே.

அயர்வுழிமன்ன னருந்தழையெதிர்ந்தவ
ளுயர்பொழிலாடிடத் தியல்வுகூறியது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—குறியிடமுணர்த்துதல். (116)

2. ஆடிடம் படர்தல்.

வெடியாடப் பின்னகங் கோற்றே னளித்து விருந்தருத்திக்
கொடியாட வுஞ்சலி லாடித் தழீஇக்கொம்மை கொட்டிக்கிள்ளை
நொடியாடன் மான்விளை யாடலெல் லாந்தனி நோக்கியெய்த
வடியாடல் வேலர் பழனிமின் னேயங்கண் வந்தருளே. (117)

ஓடரிக்கண்ணியொ டாடிடம்படர்ந்தது.

மெய்ப்பாடு—பெருமிதம்; உவகையுமாம். பயன்—குறியிடத்துய்த்துப் போகுதல்.

3. குறியிடைச்சேறல்.

வருந்தினை காத்து மருவிகின் றேற்றும் வரையிசைத்தும்
பொருந்தின சிற்றிலின் மூரல் விருந்துண்டும் பொன்னனையாய்

பருந்தடர் வேலர் பழனியி லாய்பண்டைத் தோகைகண்டு
மருந்தினை வாய்ப்புலன் போய்மீண் மனமொத் தணுகுதுமே. (118)

ஆடிடத்தொருபா லாயவெள்ளம்
வாடிடைப்பேதையை மருங்ககன்றது.

மெய்ப்பாடு—அது. பயன்—ஆயம்பிரிதல்.

4. இடத்துய்த்து நீங்கல்.

வெல்கதிர் வேலர் பழனிநல் லாய்நில்லு வெவ்வாவுன்
னல்குலுக் கிட்ட வடிபுறைக் காழ்க ளடியுறைக்கும்
மல்குமுன் கூந்த லுறையா துறைய மலர்த்தடங்க
ணல்கிய கையுறை யாங்கேகி நான்கொண்டு நண்ணுவனே. (119)

நறுமலர்க்கோதையைக் குறியிடத்துய்த்தது.

மெய்ப்பாடு—அது. பயன்—தலைமகளைக் குறியிடத்துய்த்துநீங்குதல்.

5. உவந்துரைத்தல்.

கண்ணா யிரங்கொண்ட விண்ணுடர் கோனைக் களிமயிலாய்த்
தண்ணார் பழனிக் குகவேளிங் கேவிசி தன்மையில்யான்
நண்ணுமு னந்தப் புலோமசைத் தோகை நடந்ததென்னப்
பெண்ணா ரமிர்தணங் கேவந்த தோற்றம் பெரிதுநன்றே. (120)

முருகார்சோலையின் மொய்குழன் மடந்தையை
யொருசா ரெதிர்ந்தவ னுவந்துரைத்தது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—தலைமகளைக் கண்டு தன் காதன்மிகுதி யாற் றோன்றிய பேருவகையை யாற்றுகில்லா னாற்றுதல்; தலைமகளை மகிழ் வித்தலுமாம்.

6. மருங்கணைதல்.

கந்தர்வை யாபுரி யன்னாள்விண் ணோர்கண் புதைத்தொதுக்கக்
தந்தென வேள்கொடி கைக்கொண்டு பூங்கொடி சார்ந்துநின்றாள்
விந்தமு மேருவும் வாதாய் நிலத்தை மெலித்ததுபோல்
வந்தடர் மாமுலை காளிரங் கீர்கொன் மருங்கினுக்கே. (121)

வெள்கியமாதரை வேறிடத்தெதிர்ந்த
புள்கிளர்வேலோன் புடைசெறிந்துரைத்தது.

மெய்ப்பாடு—அது. பயன்—சார்தல்.

7. அறிவறிவித்தல்.

முருகோர் பழனி மயிலே கலங்கன்முன் னுள்ளபடி
யருகோடி வேலை யமைப்பார்க் கெழுதி யடிமையுமிட்
டொருகோடிவண்டுண் ணத்தா துடன் கண்ணிகொண்டோதியிட்டுக்
குருகோடி மையிட்டுன் போல்வாள்செய் கோலமிக் கோலங்களே.()

தேங்கமழ்தாரோன் பாங்கியறிவுரைத்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—பாங்கியறிந்தமை தலைமகட்குணர்த்தல்.

8. உண்மகிழ்ந்துரைத்தல்.

வடம்பயில் கொங்கை யிடம்பிரி யாதின்பம் வாங்கிநல்கி
யுடம்புறு சீவனு மூசியுங் காந்தமும் போலணைதல்
கடம்பர்வை யாபுரிக் கன்னியன் னத்தினைச் சேவல்கலந்
திடம்படு பாலையந் நீர்பிரித் தூட்டு மியல்பினவே. (123)

புனைகுழலுவப்ப மனமகிழ்ந்துரைத்தது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—நயப்புணர்த்துதல்.

9. ஆயத்துய்த்தல்.

அன்புடை யையனு மம்மையுங் காணவொ ராயிரநூற்
றொன்பது சோதரங் கொண்டோர் பழனியி லோதிமமே
நின்பிரி வாற்செவ்வி யில்லாத வாய நெடுங்கலத்திற்
பொன்பொதி நாயக மாணிக்கம் போலப் பொலிந்தருளே. (124)

ஆயவெள்ளத் தன்னமன்னவளைச் சேயவேலவன் செல்லவிடுத்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—புறத்தாரறியாமைப் பிரிதல்.

[தொடரும்.]

T. K. இராமாநுஜையங்கார்,

உதவிப்பத்திராசிரியர்.

ஸ்ரீ:

மதிப்புரை.

ஆராய்ச்சித்தொகுதி:—இது இராமநாதபுரம் வித்வான் ஸ்ரீமத் மு. இராகவையங்காரவர்களால் அரிதின்முயன்று ஆராய்ந்தெழுதி அப்போதப்போது "செந்தமிழ்"வாயிலாக வெளியிடப்பட்டன வும் பிறவுமாகிய கட்டுரை பலவற்றுள் 35 கட்டுரைகளை முதற் பகுதியாகத் திரட்டி, அவர்களது அறுபதாம் ஆண்டுநிறைவு விழாக்கொண்டாட்டத்தின் அறிகுறியாக அவர்களுடைய செல்வப் புதல்வர்கள் ஸ்ரீமான். சேஷாத்திரி ஐயங்கார் பி. ஏ. பி. எல். அட்வகேட், ஸ்ரீமான். நாராயணையங்கார் பி. ஏ., வக்கீல்: இவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இவ்வாராய்ச்சிக்கட்டுரைகளின் ஆசிரியரான ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களையறியாத தமிழறிஞ ரொருவருமிரார். ஆனாலும், அவர்கள் இவ்வாராய்ச்சித்தொகுதியைப் படித்தறிவா ராயின் இதன் ஆசிரியது தகுதியை ஒருசிறிதே முன்பு அறிந்திருந் தோமென் றெண்ணுவர்.

ஆராய்ச்சிக்கட்டுரைகளெழுதுவது எளிதான காரியமன்று. அதற்குப் பற்பலவகையான பழைய தமிழ்நூல்களிலும் ஆராய்ச்சி முறைகளிலும் நல்ல பயிற்சியும் மதிநுட்பமுமுடையராய்ப் பல ராலும் அறியப்படாத உண்மைகளை உலகிற்கு அறிவுறுப்ப தொன்றே பயனாகக்கொண்டு பாடுபடவேண்டும்.

அங்ஙனம் அரும்பாடுபட்டு எழுதினாலும் சிறிதும் தவறு வாராது காப்பது மிகவும் அரிதே. ஆதலால் நம்நாட்டுப் புலவர்பெரு மக்கள் பலர் இத்துறையில் இறங்கினாரல்லர். இங்ஙனம் அருமை யுடைய இத்துறையில் இறங்கினோர் சிலருள்ளும் இந்நூலாசிரியர் பெயர்சிறந்து விளங்குகின்றனர். இவர் பிற்காலத்து ஆராய்ச்சி யாளர்க்குச் சான்றாக விளங்குவர்.

ஆராய்ச்சியுரைகளின் முடிபுகளைச் சீர்தூக்கி உலகிற்கறி விக்கவல்லவர், அத்துறையுள் பயிற்சியுள்ளவரேயாவர். ஆதலால்,

"புலமிக்கவரைப் புலமைதெரிதல் புலமிக்கவர்க்கே புலனாம்" என்பதற்கிணங்க, இவ்வாராய்ச்சித்தொகுதிமுழுதும் ஆராய்ந்து அதன் சீர்மை முதலியனவும் ஆசிரியர் தகுதிமுதலியனவும் படிப்போர்க்கு நன்குவிளங்குமாறு சென்னைச் சர்வகலாசங்கத்தின் தமிழாராய்ச்சித்துறைத்தலைவரான ராவ்ஸாஹிப் ஸ்ரீமான். S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L., அவர்களால் இந்நூற்குத் தகுதியானதொரு முகவுரை வரையப்பெற்றிருக்கிறது; அம்முகவுரையைப் படித்தபின்பு இந்நூலைப்பற்றியும் இந்நூலாசிரியரைப்பற்றியும் அம்முகவுரையிற் சொல்லப்படாத சிறப்பியல்பு ஒன்றேனும் புலப்படவில்லை.

இவ்வாராய்ச்சியுரைகளால் அப்போதைப்போது தமிழுலகு புதியபுதிய வுணர்வடைந்து வந்திருக்கிறது. உண்மையுணர்வில்லாத வுலகிற்கு அவ்வுண்மைப்பொருள் இதுவென்று உதவுதலைக் காட்டிலும் வேறெருப்புரவாண்மை என்னை? இது புத்தகமாக வெளிவந்திருப்பதால் வித்துவான்வகுப்பினர்க்கும் பயன்படத்தக்கது.

இதன் ஆசிரியரது கல்விப் பெருமையை இவ்வாராய்ச்சியுரைகளாலன்றியே பலராலும் அறியப்படாது கிடந்த ஆயிரக்கணக்கான தமிழ்ப்பழம்பாடல்களைத் திரட்டி வெளியிட்ட பெருந்தொகைநூலாலும், சென்னைச் சருவகலாசங்கத்தின் சரித்திராசிரியர் திரு. V. R. இராமச்சந்திரதீக்ஷிதர், M.A., அவர்கள் எழுதிய ஆசிரியர்வரலாற்றானும் பல தமிழறிஞர்கள் எழுதிய கடிதப்பகுதியானும் நன்கறியலாகும்.

சுருங்கச்சொல்லுமிடத்து ஐயங்காரவர்கள், தாம் அரிதிற் பயின்றடைந்த கல்வியறிவை உலகிற்குப் பயன்படச்செய்துவரும் பெருந்தகையாளர்கள் எய்துதற்குரிய பேறும் சிறப்பும் பெறுதற்குச் சிறிதும் பிற்பட்டவரில்லையென்றே சொல்லலாம்.

இவர் இன்னும் பல ஆராய்ச்சியுரைகளையும் நூல்களையும் எழுதித் தமிழுலகுக்கு உபகரித்துவருமாறு இவர்க்கு அறிவு ஆற்றல் ஆயுள் ஆரோக்கியம் முதலிய பல நலன்களையும் தமிழணங்கு அருள்புரிவாளாக.

திரிபில்வதளசம்பூ (-கூவிள மூவிலை)-:இது, மதுரையிலுள்ள இராமேசுவரதேவஸ்தான பாடசாலையில் பேராசிரியராயிருந்தவரும் வடமொழி ஆங்கிலம் முதலிய பன்மொழிகளினும் புலமிக்கவருமாகிய பிரும்மஸ்ரீ. V. S. இராமஸ்வாமி சாஸ்த்ரி B.A., B.L. அவர்களால், தாம் சென்றுவந்த காசியாத்திரையை விஷயமாகக்கொண்டு, வடமொழியில் இனியதெள்ளியசொற்களால் சந்தருப்பத்துக்கேற்ற பல்வேறு சந்தவிருத்தவகையில் யாக்கப்பெற்ற சிறந்த பல சுலோகங்களும் நலமிக்க வுசனப்பகுதியும் விரவிவருமாறு இயற்றி நாகரலிபியில் அழகாக அச்சிட்டு வெளியிடப்பெற்றது; வில்வபத்திரம் மூன்றிதழ்களுடையதாய்ச் சிவபெருமான்றிருவடிகளில் சமர்ப்பிக்கப்பெறுவதுபோல இதுவும் உரையும் பாட்டும் இடையிடை விரவிய மூன்று பகுதிகளையுடையதாய் ஆலவாயிற் சோமசுந்தரனடிக்கீழ் அர்ப்பணஞ்செய்யப்பட்டமைபற்றித் திரிபில்வதளசம்பூ எனப் பெயர்பெறுவதாயிற்று.

இதில் இந்நூலாசிரியர் தாம் மதுரையினின்று புறப்பட்டது முதல் சென்றசென்ற தலங்களின் தெரிசனங்களையெல்லாம் கேட்பவர்க்கும் படிப்பவர்க்கும் தாம்தாம் காண்பனபோலத் தெளிவாகத் தோன்றும்படி கூறிச்செல்லுந்தகவு போற்றற்குரியது; ஒவ்வோரிடத்தும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் அழகாக வருணிக்கப்பட்டுள்ளன. மூர்த்தி, தல, தெய்வ தோத்திரரூபமான சுலோகங்கள் பலவும் பக்திரஸமுடையன. சிறந்த பல தலவரலாறுகளையும் தேய வரலாறுகளையும் சுலோகங்களும் உரைநடையும் நன்குவிளக்குவன.

இதனால், சாஸ்திரியவர்களுடைய வடமொழிப்பிரபந்தரசனா சாமர்த்தியம் நன்குவெளியாகிறது. அவர்கள் இன்னும் இவ்வாறே வெவ்வேறு பிரபந்தங்கள்செய்து உபகரிக்குமாறு எல்லாம்வல்ல இறைவன் திருவருள் புரிக.

ஸ்ரீபகவத்கீதை முதற்பாகம்:—இது தேவநாகர எழுத்திலும் தமிழெழுத்திலும் மூலசுலோகங்கள் பதிக்கப்பட்டு அவற்றின் கீழே தமிழில் பதவுரை பொழிப்புரைகளும் ஒவ்வோரத்தியாயத்தின் முடிவிலும் அவற்றிற் சொல்லப்பட்ட பொருள்களுக்குத் தொகுத்துரைகளும் பதிக்கப்பட்ட முதன் மூன்று அத்தியாயங்களடங்கியது. இதனை எழுதி யுதவிய ஸ்ரீமத் சூத்திராநந்தரவர்களுடைய பரோபகாரசிந்தை பாராட்டத்தக்கது.

இதற்குமுன் பல தமிழுரைகள் அச்சிடப்பட்டிருப்பினும் அவை மிக விரைவிற் செலவாய்விடுதலால் இத்தகைய புத்தகங்கள் அடிக்கடி பதிக்கப்பெறுவது நலமே. ஸம்ஸ்கிருதபாஷையிற் பயிற்சியில்லாத மாணவர்களும் பொருளுணர்ந்துகொள்ளும்படி இது தெளிவான தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கிறது. மேலுள்ள பதினைந்து அத்தியாயங்களுக்கும் உரை வெளிவருமாறு இப்புத்தகங்களைத் தமிழ்மக்கள் வாங்கி இதன் ஆக்கியோரை ஊக்குவாராக. இதன் விலை அணா 9. கிடைக்குமிடம்: கிரி பிரதர்ஸ், 28 பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.